# என்னைப் படி அல்லது வருத்தப்படு

## மரணத்தின் பின் எனக்கு நடப்பது என்ன?



இச்சிறு புத்தகம் பலருக்கு வெளிப்பாடாக அமையும்

**அருட்தந்தை போல் ஓ சுலிவான் அடிகளார்**

மொழிபெயர்ப்பு :

**அருட்தந்தை பிலிப் அருளானந்தம்**

**உதயதாஸ் அடிகளி**

விற்பனைக்கு அல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னைப்படி அல்லது வருத்தப்படு

# மரணத்தின் பின் எனக்கு நடப்பது என்ன?

இச்சிறுபுத்தகம் பலருக்கு வெளிப்பாடாக அமையும்

அருட்தந்தை போல் ஓ சுலிவான்

மொழிபெயர்ப்பு:-

அருட்தந்தை பிலிப் அருளானந்தம்

உதயதாஸ் அடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nihil Obstat :
**Rev. Fr. Leonardo Agcaoili**

Imprimatur
**+Hernando Antiporda, D.D.**
**V.G., Auxiliary Bishop of Manila**

Printed with the special permission
of the Mother Prioress
Monastery Pius XII of Perpetual Rosary
Fatima, Portugal
1999

**Our Cover**

It shows a newly-released soul from Purgatory in the arms of our Lord. The artwork was done by Artist Bro. Ton Raymundo



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Please help propagate devotion to the Holy Souls by joining the

**"PRAYER WARRIORS OF THE HOLY SOULS"**
**An Apostolate of the**
**Monfort "Shared Blessings" Foundation, Inc.**

Cong. Narciso D. Monfort, M.D.†
Founding President

Chita G. Monfort
Executive Director

**Postal Address:**
P.O. Box 220, Greenhills, Metro Manila, Philippines

**Office Address:**
Unit E2 Gueventville I, Calbayog St.,
Brgy. Highway Hills, Mandaluyong City
Tel. Nos. (63-2) 531-0391-532-2831
locals 100 and 101
www.pwhs-mfi.org
e-mail: info@pwhs-mfi.org
Hotline Text No.: +63-918-9290603



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முன் அட்டைப்படம்:**

உத்தரிக்கும் இடத்தில் இருந்து புதிதாக விண்ணகத்திற்கு செல்லும் ஓர் ஆத்துமத்தை ஆண்டவர் அணைத்துக் கொண்ட விதம். இச்சித்திரமானது சகோதரர் ரொன் ரெமுண்டோவினால் தீட்டப்பட்டதாகும்.

இப்புத்தகத்தை அச்சிட்டு மற்றவர் மத்தியில் பரப்பிட உதவிட விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**Gihan Nanayakkara**
721/B, Temple Road,
Kohalwila,
Dalugama,
Kelaniya,
Sri Lanka.
Tel: 00 94 71 6243316, 0718563646

**2013 - 10, 000**

**மொழிபெயர்ப்பு:-**
**அருட்தந்தை பிலிப் அருளானந்தம்**
**உதயதாஸ் அடிகள்**

**அச்சுப் பதிப்பு :**
**கத்தோலிக்க அச்சகம்**
**கொழும்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "இறுதிச் சுத்திகரிப்பு அல்லது உத்தரிக்கும் இடம்"

(கத்தோலிக்க திருமறையின் மறைக்கல்வி நூலிலிருந்து)

1030: கடவுளின் அருளிலும் நட்பிலும் மரணிக்கும் அனைவருக்கும் முடிவில்லா மீட்பு உறுதிப்படுத்தப்பட்ட போதிலும், மரணத்தின் பின்னர் விண்ணக இன்பத்தை அடையும் பொருட்டு புனித நிலையை அடைய தூய்மைப்படுத்தப்படுவர்.

1031: தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இறுதியாக தூய்மைப்படுத்தப்படும் நிலைக்கு திருச்சபை உத்தரிக்கும் இடம் என்று பெயரிடுகிறது. இது முழுமையாக தண்டிக்கப்பட்டவர்களுக்கான தண்டனையில் இருந்து முற்றிலும் வேறுபட்டது. உத்தரிக்கும் இடம் பற்றிய விசுவாச சத்தியத்தை திருச்சபையானது புளோரன்ஸ் மற்றும் ரென்ட் பொதுச் சங்கங்களில் எடுத்துரைக்கப்படுகிறது. மேலும் திருச்சபை மரபிலும் திருவிவிலிய பகுதிகளின் சான்றுகளோடு தூய்மையாக்கும் நெருப்பு பற்றி பேசப்படுவதைக் காணலாம்.

***சில பிழைகளுக்குத் தானும் தூய்மையாக்கும் நெருப்பு இறுதித் தீர்வுக்கு முன்னர் இருப்பதை நாம் நம்ப வேண்டும். ஏனெனில் உண்மையின் வடிவமானவரே இவ்வாறு பேசுகிறார், பரிசுத்த ஆவிக்கு எதிராக பேசுபவர்கள் இக்காலத்திலும் சரி வருங்காலத்திலும் சரி மன்னிப்பு பெற மாட்டார்கள். இக்கூற்றிலிருந்து, சில தவறுகள் இக்காலத்தில் மன்னிக்கப்படுகின்றது என்றும் மற்றும் சில வருங்காலத்தில் என்றும் எமக்கு தெளிவாகிறது.***

1032: இப்படிப்பினையானது திருவிவிலியத்தில் காணப்படும் இறந்தவர்களுக்காக செபிக்கும் பழக்கத்திலும் ஊன்றியிருக்கிறது; "ஆகவே, யூதாஸ் மக்கபேயஸ், இறந்தவர்கள் தங்களின் பாவத்தினின்று விடுதலை பெறும்படி அவர்களுக்காக பாவம் போக்கும் பலி ஒப்புக் கொடுத்தார்" ஆரம்ப காலந் தொட்டே திருச்சபையானது இறந்தவர்களின் நினைவைச் சிறப்பித்து, அவர்களுக்காக செபங்களையும், எல்லாவற்றிக்கும் மேலாக, திருப்பலியையும் ஒப்புக் கொடுத்து, அவ்வாறாக அவர்கள் தூய்மையடைந்து இறை தரிசனத்தைப் பெறவேண்டுமென்று செய்து கொண்டே வருகிறது. மேலும் திருச்சபை தான தருமம், பூரண பலன்கள் மற்றும் இறந்தவர் பொருட்டு செய்யும் தப முயற்சிகளையும் ஊக்குவிக்கிறது.

***ஆகவே நாம் அவர்களை நினைவு கூர்ந்து அவர்களுக்கு உதவிடுவோம். யோபுவின் மகன்மார் அவர்களின் தந்தையின் பலியினால் தூய்மையாக்கப்பட்டார்கள் என்றால், நாம் இறந்தவர்களுக்காகச் செய்யும் நற்செயல்கள் அவர்களுக்கு ஆறுதல் தரமாட்டாதோ? ஆகவே, இறந்தவர்களுக்காக செபிப்பதிலும் அவர்களுக்கு உதவிடவும் பின்வாங்காதீர்கள்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னைப்படி அல்லது வருத்தப்படு

அருட்தந்தை போல் ஓ' சுலிவான்
அடிகளாரால் எழுதப்பட்டது.

**லிஸ்பன் நகர கர்தினால் முதுபெருந்தந்தையின் அனுமதி,**
**கர்தினால் இல்லம், லிஸ்பன்.**

அருட்தந்தை போல் ஓ' சுலிவானால் எழுதப்பட்ட அழகான இச்சிறு நூலை என் முழு உள்ளத்தோடு சிபாரிசு செய்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்நூல் சிறிதாயினும் விசுவாச சத்தியமான உத்திரிப்பு இடம் பற்றிய அறிவில்லாத பல கத்தோலிக்கர் மத்தியில் பெரு நன்மை பயக்கும் என்பதில் சந்தேகமில்லை. போதிய விளக்கமின்மையால் அவர்கள் துன்புறும் ஆன்மாக்களுக்கு உதவ முன்வருவதில்லை. இவ்வான்மாவுக்குத் தேவையான செபங்களையும், திருப்பலிகளையும் நிறைவேற்றவும் தவறுகிறார்கள்.

ஆகவே, எல்லாக் கிறிஸ்தவர்களும் இச்சிறு நூலை வாசித்து, முடிந்தளவு பரப்ப முயற்சிக்க வேண்டுமென்பதே எமது விருப்பமாகும்.

4/3/1936.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

## என்னைப்படி அல்லது வருத்தப்படு

இத்தலைப்பானது சில வேளைகளில் பயமுறுத்துவதாக இருக்கலாம். ஆனாலும் அன்புமிக்க வாசகரே, இச்சிறு புத்தகத்தை வாசிக்கும் போது இது உமக்கு நன்மை பயக்கும் என்பதை நீர் புரிந்து கொள்வீர்.

ஏனெனில் இது நாம் எவ்வாறு மீட்படைவது என்றும், எவ்வாறு சொல்லிலடங்கா துன்பங்களிலிருந்து மற்றவர்களை மீட்பது என்றும் கற்றுத் தருகிறது.

சில புத்தகங்களை வாசிப்பவர்கள் அவற்றை நல்லது எனக் கூறினாலும் மறந்து விடுகிறார்கள். இன்னும் சில புத்தகங்களை வாசிக்காமல் விடுவதே நன்று. ஆனால் சில புத்தகங்கள் வாசகர்களுக்கு மட்டுமல்லாமல் ஏனையோருக்கும் நன்மை பயர்ப்பதால் விலைமதிக்க முடியா நூல்களின் வரிசையில் இடம் பிடிக்கின்றன. அவற்றை வாசித்த பின்னும் செயற்பாட்டில் ஈடுபடாமை ஒருவரின் துர்அதிஷ்டமே.

இவ்வகையில் இந்நூலும் இடம் பெறுவதை மறுத்தலாகாது. ஆகவே, இதை மீண்டும் மீண்டும் வாசிப்பதோடு செயற்பாட்டில் இறங்கினால் ஒருபோதும் கவலைப்படப் போவதில்லை. சொல்லிலடங்கா ஆசீர்களும், வரப்பிரசாதங்களும் கிடைப்பதோடு, நற்செயல்களின் பொருட்டு விண்ணகத்தில் விசேட இடம் உரிமையாகும் என்பதில் ஐயமில்லை.

இதை வாசித்து செயற்படுங்கள்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தரிக்கும் இடம்

*'என்மேல் இரக்கமாயிரும், என் நண்பர்களே,*
*நீங்களாயினும் என்மேல் இரக்கம் வையுங்கள். ஏனெனில்,*
*ஆண்டவரின் கரம் என்மேல் வலிமையாய் இருக்கின்றது".*

உத்தரிக்கும் இடத்தில் இருக்கிற பரிதாபமான ஆன்மாக்கள் உலகிலுள்ள தம் நண்பர்களிடம் வேண்டும் முறையையே நாம் கேட்டோம். அவர்களது துன்பத்தின் ஆழத்திலிருந்து இரந்து மன்றாடும் விதமே இதுவாகும். ஆனால் எங்களில் எத்தனை பேர் காது கேளாதவர் போல் நடந்து கொண்டுள்ளோம்.

சில கத்தோலிக்கர், ஏன் பக்தியுள்ள கத்தோலிக்கரில் பலர் கூட உத்தரிப்பு இடத்திலுள்ள ஆன்மாக்களை மறந்து வாழ்கின்றனர். அவர்கள் உத்தரிக்கும் இடம் பற்றிய விசுவாசம் அற்றவர்களைப் போல் நடந்து கொள்வதையும் நாம் காணலாம்.

அவர்கள் தூய ஆன்மாக்களுக்காக திருப்பலி ஒப்புக் கொடுப்பதோ, அவர்களுக்காக திருப்பலியில் கலந்து கொள்வதோ, செபிப்பதோ, ஏன் நினைத்துக் கூடப் பார்ப்பதில்லை. இவ்வாறு நாட்களும், வாரங்களும், மாதங்களும் உருண்டோடுவதைக் காணலாம். அவர்கள் தங்களது நாளாந்த வாழ்க்கையில் இன்பமாகவும், உடல் நலத்தோடும், நாளாந்த வேலைகளிலும் ஈடுபடும் அதேவேளை இப்பரிதாபமான ஆன்மாக்கள் சொல்லிலடங்காத் துன்பங்களையும் உத்தரிப்பு இடத்தின் நெருப்பையும் அனுபவிக்கின்றனர்.

ஏன் இந்த அசட்டைத்தனம்? அறியாமை, விளக்க முடியாத அறியாமை.

மக்கள் இந்த உத்தரிக்கும் இடம் பற்றி விளங்கிக் கொள்வதில்லை. அதன் நெருப்பைப் பற்றியோ, பல வருட காலம் ஆன்மாக்கள் அதில் துன்பப்படுவது பற்றியோ, அவர்கள் புரிந்து கொள்வதில்லை. அதன் விளைவாக அவர்கள் உத்தரிக்கும் இடத்தை தவிர்க்கவோ, இவர்களது உதவியில் மட்டுமே தங்கியுள்ள பரிதாபமான ஆன்மாக்களுக்கு உதவவோ முன்வருவதில்லை.

அன்புமிக்க வாசகரே, இப்புத்தகத்தை முழுமையாக வாசித்த பின்னர் இது உம் கைகளுக்கு எட்டிய நாளை நினைத்து நன்றி கூறுவீர் என்பதில் சந்தேகமில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# I

## உத்தரிக்கும் இடம் என்றால் என்ன?

இது எரி நெருப்புக் கொண்ட சிறைச்சாலையாகும். இங்கேதான் இறந்தவர்களின் ஆன்மாக்கள் அமிழ்த்தப்பட்டு பயங்கர தேவனைக்கு உட்படுத்தப்படுகிறது. இவர்களது இத்துன்பத்தின் அகோரத்தை எண்ணிப் பார்த்தால் இவ்வெரி நெருப்பால் ஒரு நிமிடம் நூற்றாண்டுகளைப் போல் தென்படுவதை நாம் உணரலாம். உத்தரிக்கும் இடம் பற்றி திருச்சபை வல்லுனர்கள் தெரிவிப்பதை சற்று அவதானிப்போம்.

இறையியலாளர்களின் இளவரசரான **புனித தோமஸ் அகுவைனாஸ்** பின்வருமாறு கூறுகிறார்: "உத்தரிக்கும் இடத்திலுள்ள எரிநெருப்பானது நகர நெருப்பைப் போலவே பயங்கரமானது. மேலும் இவ்வுலகிலுள்ள எல்லாத் துன்பங்களை விடவும் மோசமானது"

தூய மறைவல்லுனர்களில் பிரதானமானவரான **புனித அகுஸ்தீனார்** இவ்வாறு கற்பிக்கின்றார். "விண்ணகத்திற்குள் நுழைவதற்கு முன் அவர்களின் குற்றங்களுக்காக தூய்மைப்படுத்தப்படுவதற்கு இறப்பின் பின்னர் ஆன்மாக்கள் பயங்கரமான நெருப்பிற்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இவ்வுலக வாழ்க்கையில் நாம் நினைத்துக் கூட பார்க்க முடியாத அளவிற்கு அது பயங்கரமானதாய் அமைகிறது. இந்நெருப்பு அவ்வான்மாக்களைச் சுத்திகரித்து தூய்மைப்படுத்துகிறது. இதன் தன்மையை இவ்வுலகத்தில் எம்மால் உணர முடியாது".

அலக்சாந்திரியாவின் **புனித சிரில்** பின்வருமாறு உரைக்கிறார். "இறுதித் தீர்ப்பு வரும்வரை இவ்வுலகில் எல்லா விதமான துன்பங்களையும் அனுபவிப்பது உத்தரிக்கும் இடத்தில் ஒரு நாளை விட விரும்பத்தக்கது".

இன்னுமொரு பெரிய புனிதர் கூறுவதாவது. "உத்தரிக்கும் இடத்திலுள்ள நெருப்போடு இவ்வுலக நெருப்பை ஒப்பிடுகையில், இது எமக்கு புத்தெழுச்சி தரும் தென்றலைப் போன்றது".

ஏனைய தூய எழுத்தாளர்கள் இவ்வெரி நெருப்புப் பற்றி பின்வருமாறு விளக்குகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உத்தரிக்கும் இடத்திலுள்ள வேதனை இத்தனை பயங்கரமாய் இருப்பது எவ்வாறு?

1வது: இவ்வுலக நெருப்பானது இறைவனின் நன்மைத்தனத்திலிருந்து எமது நன்மைக்காகவும் எமக்கு உதவிடவும் உருவாக்கப்பட்டது. அதுவே தண்டனையாக மாறும் போது அதி பயங்கரமாய் இருக்கும் என்பதை நாம் நினைத்துப் பார்க்கலாம்.

2வது: உத்தரிக்கும் இடத்திலுள்ள நெருப்பானது இறைவனின் நீதியிலிருந்து பிறக்கிறது. அது தண்டித்து தூய்மைப்படுத்துவதற்காக பயன்படுவதால் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு கொடூரமாய் இருக்கும்.

3வது: இந்நெருப்பானது களிமண்ணாலான எமது உடலையே எரித்து சாம்பலாக்கிறது. ஆனால், உத்தரிக்கும் இடத்து நெருப்போ ஆன்மா மீது செயற்படுவதால் மிகுந்த வேதனை அளிப்பதாய் அமையும் என்பதில் ஐயமில்லை.

4வது: இவ்வுலக நெருப்பானது அதில் போடப்பட்டதை சுட்டெரித்து அழித்துவிடுகிறது. ஆகவே, துன்பமும் மறைந்து விடுகின்றது. ஆனால் உத்திரிக்கும் இடத்து நெருப்போ ஆன்மாவை அழிக்காமலும், அதன் உணர்ச்சியை குறைக்காமலும் தொடர்ச்சியான வேதனையை அதி நுட்பமான முறையில் அளிக்க வல்லது.

5வது: உத்தரிக்கும் இடத்து நெருப்பே இப்படி மிகுந்த வேதனையைத் தரும் வேளை இதைவிட கடவுளிடமிருந்து பிரிந்து இருக்கும் வேதனை அவ்வான்மாவுக்கு பல மடங்காய் அதிகரிக்கிறது. உடலிலிருந்து பிரிந்து ஆன்மா அதன் ஆன்மீகத் தன்மையின் நிமித்தம் கடவுளோடு ஒன்றிக்க ஆவலாய் இருக்கும். ஆயினும் அது தடைப்படும் போது அவ்வேதனையை எம்மால் விபரிக்க முடியாது.

ஆகவே, அறிவு படைத்த மனிதர்கள் இப்படிப்பட்ட பயங்கரமான முடிவைத் தவிர்க்க முற்படாதிருப்பது அவர்களது மடமையே ஆகும். மேலும் எம்மால் இதை விளங்கிக் கொள்ள இயலாததால் அதைப் பற்றி பேசவோ. நினைக்கவோ, கூடாது என்போமாயின் அதனால் ஏற்படும் பயன் என்ன? உத்தரிக்கும் இடம் இல்லாமற் போய் விடுமா? நாம் நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி உத்தரிக்கும் இடத்து வேதனை எம் சிந்தனைக்கு அப்பாற்பட்டது. இதையே **புனித அகுஸ்தீனாரும்** வலியுறுத்துகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II

## இவை எல்லாம் உண்மையா?

உத்தரிப்பு இடத்தின் இருப்பு பற்றி எந்தவொரு கத்தோலிக்கரும் சந்தேகப்பட்டது கிடையாது. ஏனெனில் திருச்சபையின் ஆரம்ப காலந் தொட்டு இது கற்பிக்கப்படுவதால், நற்செய்தி எங்கெல்லாம் பரப்பப்படுகிறதோ அங்கெல்லாம் உத்தரிப்பு இடம் பற்றிய உண்மையும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

இவ்விசுவாச உண்மையானது திருவிவிலியத்தில் வெளிப்படுத்தப்பட்டு, திருமரபால் கையளிக்கப்பட்டு வழுவாத திருச்சபையால் போதிக்கப்பட்டு பல இலட்சக் கணக்கான விசுவாசிகளால் எப்போதும் நம்பப்படுகின்ற விடயமாகிறது.

எவ்வாறாயினும், நாம் முதலில் குறிப்பிட்டதற்கிணங்க இந்த முக்கியமான விடயத்தின் மீதான விளக்கம் குறைவாகவும், மேலோட்டமானதாகவுமே உள்ளது. இது வேண்டுமென்றே கண்ணை மூடிக்கொண்டு பாதாளங்களை நோக்கிச் செல்லும் ஒருவருக்கு ஒப்பாகும்.

உத்தரிக்கும் இடத்தில் எமது நாட்களைக் குறைக்கவோ அல்லது முற்றாக அதிலிருந்து விடுபடவோ அதைப்பற்றிய தெளிவான விளக்கம் எமக்குத் தேவை. மேலும் அதிலிருந்து விடுபட எமக்குத் தரும் முறைமைகளைப் பின்பற்றவும் வேண்டும்.

இதைப் பற்றி நினைவு இல்லாமல் இருப்போமானால் நீண்ட, கடினமான உத்தரிப்பு காலத்தையே எமதாக்கிக் கொள்வோம்.

### போலாந்து இளவரசர்

அரசியல் காரணங்களின் நிமித்தம் தமது நாட்டைவிட்டு வெளியேறி பிரான்ஸ் நாட்டில் அழகான மாளிகையை வாங்கிக் குடியேறிய போலாந்து நாட்டு இளவரசர், துர்அதிஷ்ட விதமாக தமது இளமைக்கால விசுவாசத்தை இழந்து கடவுளுக்கு எதிராகவும், மரணத்தின் பின்னரான வாழ்வுக்கு எதிராகவும் ஒரு புத்தகத்தை எழுதத் தொடங்கினார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் மாலையில் அவரது தோட்டத்தில் நடந்து கொண்டிருந்த போது ஒரு ஏழைப் பெண்மணி அழுது கொண்டு வந்தாள். அவரும் அதற்கான காரணத்தை கேட்டார்

அப்போது அவள் பின்வருமாறு கூறினாள். "இளவரசரே, உமது முன்னாள் சேவகனான ஜீன் மரியின் மனைவியே நான். அவர் இரு நாட்களுக்கு முன் மரணித்தார். அவர் எனக்கு நல்ல கணவராகவும் உமக்கு நல்ல விசுவாசமான ஊழியராகவும் இருந்தார். அவர் நீண்ட நாட்களாக நோய்வாய்பட்டிருந்ததால் எங்களது சேமிப்பெல்லாம் மருத்துவர்கள் மீது செலவழித்து விட்டோம். அவரது ஆன்மாவுக்காக திருப்பலி ஒப்புக் கொடுக்க என்னிடம் ஒன்றுமில்லை" என்றாள்.

இளவரசரும் அவளது துயரத்தால் மேற்கொள்ளப்பட்டவராய் ஆறுதல் வார்த்தைகளைக் கூறி அவர் எதிர்கால வாழ்வில் நம்பிக்கையற்றவராய் இருந்தாலும் அவளிடம் சில தங்க நாணயங்களைக் கொடுத்து அவளது கணவனின் ஆன்மாவுக்காக திருப்பலிகளை ஒப்புக் கொடுக்கச் சொன்னார்.

சில நாட்களுக்குப் பின் ஒரு மாலைப் பொழுதில் இளவரசர் தமது புத்தகத்தை எழுதி முடிப்பதில் கருத்தாய்ச் செயற்பட்டுக் கொண்டிருந்த போது, கதவைச் சத்தமாய் தட்டுவதை அவதானித்த அவர் விருந்தாளியை உள்ளே வரும்படி அழைத்தார். அறையைத் திறந்து உள்ளே வந்தவர் இளவரசரது மேசைக்கு முன்பாக வந்து நின்றார்.

அவரை உற்று நோக்கிய இளவரசருக்கோ ஆச்சரியம். ஏனெனில் அவரது முன்னாள் ஊழியரான இறந்துபோன ஜீன் மரியே புன்னகை பூத்தபடி அங்கே நின்று கொண்டிருந்தார். மேலும் அவ்வூழியன் பேசியதாவது; "இளவரசரே நீர் எனது ஆன்மாவுக்காக திருப்பலி ஒப்புக்கொடுக்க என் மனைவிக்கு உதவியளித்ததற்காக நன்றி கூறவே இங்கு வந்தேன். கிறிஸ்துவின் மீட்பளிக்கும் இரத்தத்திற்கு நான் நன்றியுடையவனாய் இருக்கின்றேன். இப்போது நான் பரலோக வீட்டை நோக்கிச் செல்கின்றேன். ஆனால் கடவுள் உமது நன்மைத்தனத்துக்கு நன்றி கூறும்படி எனக்கு அனுமதியளித்தார். மேலும், இளவரசரே கடவுள் இருக்கின்றார். எதிர்கால வாழ்வு இருக்கிறது, பரலோகமும், நரகமும் இருக்கிறது என்று ஆணித்தரமாகக் கூறி மறைந்து போனார்.

இளவரசரும் முழந்தாள் படியிட்டவராய் விசுவாசப் பிரமாணத்தை சொல்லி உறுதியாக அறிக்கையிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுமொரு விதமான விளக்கத்தை பின்வரும் சம்பவத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

புளோரன்ஸ் மறைமாவட்ட பேராயரான **புனித அந்தோனியஸ்** தாம் வாழ்ந்த டொமினிக்கன் மடத்தின் நண்பரும் பக்திமானுமான மனிதர் ஒருவர் இறந்த பின்பு அவரது ஆன்மாவுக்காக திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

எனினும் நீண்ட காலத்திற்கு பின்பு அம்மனிதரின் ஆன்மா புனிதருக்குத் தோன்றி தமது துன்பத்தின் மிகுதியைக் காண்பித்தது. பேராயரும் "என் அருமை நண்பரே பக்திமானான நீர் இன்னமும் உத்தரிக்கும் இடத்திலா இருக்கின்றீர்?" என்று கேட்டார்.

அவரைப் பார்த்த பேராயரும் "என் அன்பு நண்பரே எவ்வளவு நல்ல பக்திமாக வாழ்வு வாழ்ந்த நீரா உத்தரிக்கும் இடத்தில் இருக்கிறீர்? என்று ஆச்சரியமாகக் கேட்டார்.

அதற்கு துன்புறும் ஆன்மாவும், "ஆம், நான் இன்னும் நீண்ட காலத்தை உத்தரிக்கும் இடத்தில் கழிக்க வேண்டியுள்ளது. ஏனெனில், இவ்வுலகில் இருந்தபோது உத்தரிக்கும் இடத்தில் உள்ள ஆன்மாக்களுக்கு ஆறுதல் அளிக்க மறந்து விட்டேன். இப்போது கடவுளும் அவரது நீதியான தீர்ப்பின்படி எனக்காக ஒப்புக் கொடுக்கப்படும் அறுதல் முயற்சிகளை நான் யார் யாருக்காகவெல்லாம் செபித்திருக்க வேண்டுமோ, அவர்களுடைய பரிகாரமாக மாற்றிவிடுகின்றார். மேலும், கடவுள் தமது நீதியின்படி நான் வான்வீட்டை அடைந்ததும் எனது நற்செயல்களுக்கான பலாபலனைத் தருவார். எனினும், முதலில் நான் மற்றவர் மட்டில் எனது கடமையிலிருந்து தவறியதற்கான கடனைத் தீர்த்தாக வேண்டும்" என்றார்.

நம் ஆண்டவரின் வார்த்தைகளும் இதையே நமக்கு கோடிட்டுக் காட்டுகின்றன. **'நீர் எந்த அளவையால் அளப்பீரோ, அதே அளவையால் உமக்கு திருப்பலி அளக்கப்படும்'.**

இதை வாசிக்கும் அன்பர்களே, இவ்வுலகில் உத்தரிக்கும் ஆன்மாக்களுக்காக செபிக்கவும், அவர்களுக்கு உதவவும் தவறுபவர்களின் கெதியும் இந்த பக்தியான மனிதருக்கு ஏற்பட்டதைப் போலிருக்கும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# III

## எவ்வளவு காலமாக உத்தரிக்கும் இடத்தில் ஆன்மாக்கள் தங்கியிருக்கும்?

உத்தரிக்கும் ஆன்மாக்கள் அனுபவிக்கும் வேதனையின் கால அளவு

1). அவர்களுடைய தவறுகளின் எண்ணிக்கை

2). அவற்றை அவர்கள் திட்டமிட்டு செய்த விதமும் அவற்றின் பார தூரமும்

3). அவற்றுக்காக அவர்கள் தங்கள் வாழ்நாளில் பாவப்பொறுத்தல் செய்தமை / செய்யாமை, பரிகாரம் செய்தமை / செய்யாமை

4). அவர்களின் மரணத்தின் பின்னர் அவற்றுக்கான ஆறுதல் / பரிகாரம் ஒப்புக் கொடுக்கப்பட்டமை

போன்றவற்றின் அடிப்படையில் அமையும்.

மனிதர்கள் சாதாரணமாக நினைப்பதைவிட அதிக காலம் அவ்வான்மாக்கள் உத்தரிக்கும் இடத்தில் செலவிடும் என்பதை மட்டும் தெளிவாகக் கூறலாம்.

புனிதர்களின் வாழ்க்கையில் இடம் பெற்ற பல சம்பவங்களிலிருந்து சிலவற்றை மட்டும் இங்கு தரவுள்ளோம்.

**புனித லூயிஸ் போட்ரண்டின்** எனும் மாபெரும் புனிதரின் தகப்பனார் ஒரு முன்மாதிரியான கிறிஸ்தவராவார். மேலும் இவர் ஒரு கார்த்தூசியத் துறவியாக துறவு பூணவும் ஆயத்தமாயிருந்தார். ஆனால், அது இறைசித்தமாகவில்லை என உணர்ந்ததும் அம் முயற்சியை கைவிட்டார். பலகாலமாக கிறிஸ்தவ விழுமியங்களைக் கடைப்பிடித்த பின்னர் தந்தையார் இறந்ததும் மகனும் இறை நீதியைப் பற்றி அறிந்திருந்ததால் பல திருப்பலிகளை தாம் அன்பு செய்த ஆன்மாக்களுக்காக ஒப்புக் கொடுத்தார். ஆனால் உத்தரிக்கும் இடத்தில் அவரது தந்தையாரைப் பற்றி காணப்பட்ட ஒரு காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை தமது பரிகாரச் செயல்களை நூறு மடங்காக அதிகரிக்கச் செய்தது. கடினமான தபச் செயல்களையும், திருப்பலிகள் மற்றும் செபிப்பதற்கு முன்னர் நீண்ட நேர உண்ணா நோன்பையும் மேற் கொண்டதன் பேரில் எட்டு ஆண்டுகளுக்குப் பின்னரே தமது தந்தையின் ஆன்மா விடுதலை பெற்றது.

**புனித மலாக்கியின்** சகோதரி, தமது சகோதரனின் திருப்பலிகள், செபங்கள், மாபெரும் தபச் செயல்களின் மத்தியிலும் நீண்ட காலத்தை உத்தரிக்கும் இடத்தில் கழித்ததைப் பார்க்கின்றோம்.

பம்லூனாவிலிருந்த தூய அருட்சகோதரி ஒருவர் உத்தரிக்கும் இடத்தில் முப்பதிலிருந்து அறுபது ஆண்டுவரை செலவிட்ட பல கார்மேல் சபைக் கன்னியர்களை அதிலிருந்து விடுவித்தார் எனவும் ஒரு சம்பவம் உண்டு. கார்மேல் சபைக் கன்னியர்களே நாற்பது, ஐம்பது, அறுபது ஆண்டுகள் என்றால் உலகின் பல சோதனைகளுக்கு மத்தியில் நூற்றுக்கணக்கான குறைபாடுகளுடனும் வாழும் நாம் எம்மாத்திரம்!

**புனித வின்சன்ட் பேரெர்,** தமது சகோதரியின் மரணத்தின் பின்னர் அவரது ஆன்மாவுக்காக உருக்கமாக மன்றாடி பல திருப்பலிகளையும் ஒப்புக் கொடுத்தார். சில காலத்திற்குப் பின்னர் அச்சகோதரியும் அவருக்குத் தோன்றி அவரது செப தபங்கள் இல்லையேல் தான் உத்தரிக்கும் இடத்தில் எண்ணில்லாக் காலத்தை கழிக்க நேரிட்டிருக்கும் என்று கூறினார்.

டொமினிக்கன் சபையில், சபையின் சிரேஷ்ட தலைவர்களின் ஆண்டு நினைவுகளின் போது பெயர் குறிப்பிட்டு செபிக்க வேண்டுமென்று கட்டளையே இருக்கின்றது. இதில் பல பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இறந்தவர்கள். மேலும் அவர்கள் தூய வாழ்வு வாழ்ந்த உதாரண புருஷ-ர்கள். இக்கட்டளை தேவையற்றதாயின் அல்லது அறிவு பூர்வமற்றதாயின் திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்டிருக்க மாட்டாது.

எல்லா ஆன்மாக்களுமே உத்தரிக்கும் இடத்தில் நீண்ட காலம் இருந்து பாவக்கடனைத் தீர்க்கும் என்றல்ல; ஏனெனில் சிலர் சில தவறுகளையும் இன்னும் சிலர் அதற்கான பரிகாரத்தையும் செய்திருந்தால் அவர்களின் தண்டனையும் குறைவாகவே இருக்கும்.

எவ்வாறாயினும் மேற் குறிப்பிட்ட அனுபவங்களில் வரும் நபர்கள் பெரும் புனிதர்களின் பரிந்துரையைப் பெற்றவர்கள் கூட நெடுங்காலம் உத்தரிக்கும் இடத்தில் இருக்க வேண்டியிருந்தால், அப்பேர்ப்பட்ட உதவியில்லாத நாங்கள் எம்மாத்திரம்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏன் இப்படிப்பட்ட நீண்ட பரிகாரம்?

**அதற்கான காரணங்களை அறிந்து கொள்ள சிரமப்படத் தேவையில்லை.**

1. பாவத்தின் துஷ்டதனம் பெரிது. எங்களுக்கு சிறிதாகத் தோன்றினாலும் அடிப்படையில் கடவுளின் எல்லையற்ற நன்மைத்தனத்துக்கு எதிரான பாரிய துரோகங்களாயும் இருக்கிறது. ஆகவே தான் புனிதர்கள் அவர்களது பிழைகளுக்காக மிகுந்த துக்கத்தோடே பரிகாரம் செலுத்தினார்கள்.

நாங்கள் பலவீனர்கள். ஆனாலும் கடவுள் தமது அளவுகடந்த ஆசீரால் எமது பலவீனங்களில் எம்மைப் பலப்படுத்தி, எமது தவறுகளின் கொடூரத்தை அறிவித்து சோதனை வெல்லத் தேவையான சக்தியைத் தருகின்றார். இதன் பிறகும் பலவீனர்கள் என்று சொன்னால் அது எம் குற்றமே. ஏனெனில் கடவுள் எமக்கு நிறைவாகத் தரும் ஒளியையும், சக்தியையும் பொருட்படுத்தாமல், செபிக்காமல, தகுந்த முறையில் தேவ திரவிய அனுமானங்களை பெறாமல் விட்டு விடுகின்றோம்.

2 பெரிய இறையியலாளர் ஒருவர் பின்வருமாறு விளக்குகின்றார். ஒரு சாவான பாவத்திற்காக ஆன்மா ஒன்று நரகத்திற்கு தள்ளப்படுமானால், எண்ணிலடங்கா அற்ப பாவங்களுக்காக உத்தரிக்கும் இடத்தில் பல வருடங்களை கழிப்பது ஒன்றும் ஆச்சரியமில்லை. சில வேளை சாவான பாவமென்று தெரியாமலும் அவை இடம்பெறுவதால் சிலர் சரியான மனமாற்றமோ அல்லது பரிகாரமோ இல்லாமல் இருப்பதும் கண்கூடு. பாவம் மன்னிக்கப்பட்டாலும் அதற்கான பரிகாரம் உத்தரிக்கும் இடத்தில் செலுத்தப்பட வேண்டும். நம் ஆண்டவர் எங்களது ஒவ்வொரு தேவையற்ற வார்த்தைக்கும் நாங்கள் கணக்குக் கொடுக்க வேண்டும் என்றும், இறுதிச் சதத்தை கொடுத்து தீர்க்கும் அளவும் சிறையில் அடைக்கப்படுவோம் என்றும் கூறுவதையும் நாம் காணலாம்.

இப்புனிதர்கள் அற்ப பாவங்களுக்காகவும், மிகவும் மனம் வருந்தி கடினமான பரிகாரங்களைச் செலுத்தினார்கள். ஆனால் நாம் கனமான பாவங்களைச் செய்தாலும் சிறிதே மனம் வருந்தி சிறிதே பரிகாரங்களையும் மேற்கொள்கின்றோம். இல்லையேல் பரிகாரங்களே செய்வதில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்ப பாவங்கள்

எந்தவொரு கத்தோலிக்கரும் செய்யக்கூடிய அற்ப பாவங்களை கணக்கிடுவது கடினமாகும்.

அ). தன் மீதான அன்பு, சுயநலம், எண்ணங்கள், வார்த்தைகள், உணர்ச்சிகளின் அடிப்படையிலான செயற்பாடுகள், அன்பில்லாத எண்ணங்கள், வார்த்தைகள் செயற்பாடுகள், சோம்பேறித்தனம், எரிச்சல், பொறாமை மற்றும் பலவிதமாக இடம்பெறும் பாவச் செயற்பாடுகள்

ஆ). கடமையில் தவறுவதினூடாக செய்யும் பாவங்கள், கடவுளை மிகவும் அற்பமாக அன்பு செய்வது, அவருக்கு பிரதி அன்பு காட்ட மறுப்பது, குளிர்ந்ததனம், அசட்டைத்தனம், நன்றியில்லாத்தனம் போன்றவற்றின் ஊடாக செயற்படுவது

எங்கள் ஒவ்வொருவருக்காகவும் மரித்த ஆண்டவருக்கு உரிய விதத்தில் நன்றி செலுத்துகின்றோமா? இராப்பகலாய் நற்கருணையில் வீற்றிருக்கும் ஆண்டவரை தரிசிக்கின்றோமா? நாங்கள் அவரை முறையாகத் தரிசிப்பதில்லை. அவர் எங்களது உள்ளத்தில் எழுந்தருளிவர அனுமதிப்பதில்லை. ஒவ்வொரு நாளும் எங்களுக்காக பலிப்பீடத்தில் பலியாகி வரப்பிரசாதங்களின் சமுத்திரத்தை திறந்துவிடும் ஆண்டவரது மாபெரும் பலியில் கலந்திட மறுக்கிறோம். இக்கல்வாரியை நோக்கிச் செல்ல சோம்பி இருக்கின்றோம். இதை வரப்பிரசாதங்களின் துஷ்பிரயோகம் என்றே கூற வேண்டும்.

இ). எங்கள் இதயங்கள் கடினமாயுள்ளன. அதில் தன் மீதான அன்பும், சுயநலமும் நிறைந்து காணப்படுகின்றன. எங்களுக்கு நல்ல அழகான வீடு இருக்கிறது. நிரம்ப உணவு, நல்ல உயர்தர ஆடைகள் மற்றும் வசதி வாய்ப்புக்கள் நிறையவே எமக்குள்ளன. ஆனால் எம்மைச் சூழ்ந்துள்ள பலர் வறுமையிலும், பசியிலும், ஏழ்மையிலும் வாடும்பொழுது நாம் எமக்கு அளவுக்கு அதிகமாய் தேவையற்ற விதத்தில் செலவிடுகிறோம்.

ஈ). நாம் வாழ்வது கடவுளுக்கு பணிபுரியவும், எமது ஆன்மாவை மீட்பதற்காகவுமேயாகும். ஆனால் எம்மில் பலர் கடவுளுக்கு காலையில் 5 நிமிடமும், மாலையில் 5 நிமிடமும் கொடுத்து விட்டு மிகுதி 24 மணித்தியாலங்களை வேலைக்கும், ஓய்வுக்கும், கழியாட்டங்களுக்குமாக செலவிடுகிறோம். கடவுளுக்கும், எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழியாத ஆன்மாவுக்கும் மிகவும் முக்கியமான கடமைக்கு, எமது மீட்புக்கு 10 நிமிடமும், மற்ற 23 மணித்தியாலமும் 50 நிமிடங்களும் நிலையற்ற வாழ்வுக்குமாகச் செலவிடுகின்றோம். இது நியாயமா?

எமது வேலையும், ஒய்வும், துன்பங்களும் கடவுளுக்காக ஒப்புக் கொடுக்கப்படுகிறது என சிலர் சொல்லலாம். அவ்வாறு செய்தால் நல்லது ஆனால் உண்மையில் எத்தனை பேர் அவ்வாறு ஒப்புக் கொடுக்கின்றோம். கடவுளைப் பற்றி ஒரு சிந்தனையும் இல்லாமல் தங்களைப் பற்றியே சிந்திப்போர் எத்தனைபேர். எங்களைப் பற்றியும் சிந்திக்கும் அவரது அன்பு இதயத்திற்கு பதிலாக நாம் அவரைப் பற்றி சிறிதளவே நினைக்கின்றோம்.

## சாவான பாவங்கள் பற்றி...

எத்தனையோ கிறிஸ்தவர்கள் சாவான பாவங்களை செய்கின்ற போதிலும் அவற்றை பாவசங்கீர்த்தனத்தில் அறிக்கையிட்டாலும் அதற்கான முறையான பரிகாரத்தை செய்வதில்லை.

**வந்தனைக்குரிய பெடே** அடிகளார் சொல்வதாவது, சாவான பாவங்களைச் செய்த பலரும் இறக்கும் தருவாயிலேயே மன்னிப்புக் கேட்கின்றனர். அவர்கள் உத்தரிக்கும் இடத்தில் இறுதிநாள் வரையும் இருக்கக்கூடும்.

மேலும் **புனித ஜெத்ரூத்தம்மாள்** தமது தரிசனங்களில் கண்டதும், இதையே சொல்கிறது. அதாவது கனமான பாவங்களைச் செய்து முறை-யான பரிகாரம் தேடாதோர் திருச்சபையின் சாதாரண பரிகார முயற்சிகளில் கணிசமானதொரு காலம் வரை பங்கெடுக்க முடியாது என்கிறார்.

ஏனெனில் 20, 30, 40, 60 வருடங்களாக கட்டிக் கொண்ட அற்ப, சாவான பாவங்களுக்காக ஒவ்வொருவரும் மரணத்தின் பின்னர் பரிகாரம் தேடியே ஆக வேண்டும்.

இப்படியாக ஆன்மாக்கள் நீண்ட காலம் உத்தரிக்கும் இடத்தில் செலவிடுகிறது என்றால் வியப்புக்குரிய விடயமன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IV

## ஏன் இந்த எளிய ஆன்மாக்களுக்காக செபிக்க வேண்டும்?

நம் ஆண்டவரின் முதற்பெருங் கட்டளை கடவுளை முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும் அன்பு செய்ய வேண்டும் என்பதே, அதன் மறுபக்கமாக அயலவர்களை எம்மை அன்பு செய்வது போல அன்பு செய்வதும் ஆகும். அதாவது நாம் ஒருவருக்கொருவர் நேர்மையாகவும், திறந்த மனத்தோடும் அன்பு செய்ய வேண்டும். இது எல்லாம் வல்ல கடவுளிடமிருந்து எமக்கு கிடைத்த அறிவுரையோ, சாதாரண விருப்பமோ கிடையாது மாறாக இப் பெரிய கட்டளையே அவரது போதனையின் அடித்தளமும் அவரது நீதியின் சாரம்சமும் ஆகிறது. மேலும் அவர் எம் அயலாருக்கு நாம் என்ன செய்கிறோமோ அவற்றை தமக்கே செய்ததாகவும் அவற்றை மறுப்போரை அவரும் மறுப்பதாகவுமே விவிலியம் சொல்கிறது.

புனித மத்தேயு நற்செய்தியில் 25:34-46 வரையான பகுதியில் கிறிஸ்து இறுதித் தீர்ப்பின்போது தாம் எதைச் சொல்லுவார் என்று குறிப்படுவதை நாம் காணலாம்.

34: பின்பு அரியணையில் வீற்றிருக்கும் அரசர் தம் வலப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து, 'என் தந்தையிடமிருந்து ஆசி பெற்றவர்களே, வாருங்கள்; உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியைப் உரிமைப் பேறாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

35: ஏனெனில் நான் பசியாய் இருந்தேன், நீங்கள் உணவு கொடுத்தீர்கள்; தாகமாய் இருந்தேன், என் தாகத்தை தணித்தீர்கள்; அன்னியனாக இருந்தேன், என்னை ஏற்றுக் கொண்டீர்கள்;

36: நான் ஆடையின்றி இருந்தேன், நீங்கள் எனக்கு ஆடை அணிவித்தீர்கள்; நோயுற்றிருந்தேன், என்னைக் கவனித்துக் கொண்டீர்கள்; சிறையில் இருந்தேன், என்னைத் தேடி வந்தீர்கள்' என்பார்.

37: அதற்கு நேர்மையாளர்கள் 'ஆண்டவரே. எப்பொழுது உம்மைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசியுள்ளவராகக் கண்டு உணவளித்தோம், அல்லது தாகமுள்ளவராகக் கண்டு உமது தாகத்தை தணித்தோம்?

38: எப்பொழுது உம்மை அன்னியராகக் கண்டு ஏற்றுக் கொண்டோம்? அல்லது ஆடை இல்லாதவராகக் கண்டு ஆடை அணிவித்தோம்?

39: எப்பொழுது நோயுற்றவராக அல்லது சிறையில் இருக்கக் கண்டு உம்மைத் தேடிவந்தோம்?' என்று கேட்டார்கள்.

40: அதற்கு அரசர் 'மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்' எனப் பதிலளிப்பார்.

41: பின்பு இடப் பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து, "சபிக்கப்பட்டவர்களே, என்னிடமிருந்து அகன்று போங்கள். அலகைக்கும் அதன் தூதருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற என்றும் அணையாத நெருப்புக்குள் செல்லுங்கள்.

42: 'ஏனெனில் நான் பசியாய் இருந்தேன், நீங்கள் எனக்கு உணவு கொடுக்கவில்லை; தாகமாயிருந்தேன், என் தாகத்தை தணிக்வில்லை.

43: நான் அன்னியனாக இருந்தேன், நீங்கள் என்னை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆடையின்றி இருந்தேன், நீங்கள் எனக்கு ஆடை அளிக்வில்லை. நோயுற்றிருந்தேன், சிறையிலிருந்தேன், என்னைக் கவனித்துக் கொள்ளவில்லை' என்பார்.

44: அதற்கு அவர்கள் 'ஆண்டவரே, எப்பொழுது நீர் பசியாக-வோ, தாகமாகவோ, அன்னியராகவோ, ஆடையின்றியோ, நோயுற்றோ, சிறையிலோ இருக்கக் கண்டு உமக்குத் தொண்டு செய்யாதிருந்தோம்?' என்று கேட்டார்கள்.

45: அப்பொழுது அவர் 'மிகச் சிறியோராகிய இவர்களுள் ஒருவருக்கு நீங்கள் எதையெல்லாம் செய்யவில்லையோ அதை எனக்கும் செய்யவில்லை என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்' எனப் பதிலளிப்பார்.

46: இவர்கள் முடிவில்லாத் தண்டனை அடையவும் நேர்மையாளர்கள் நல்ல வாழ்வு பெறவும் செல்வார்கள்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல கத்தோலிக்கர் இந்த நீதி செயலிழந்து விட்டது என்று நினைத்து சுயநலத்திலும், தன்மீதான அன்பிலும காலத்தை செலவிடுகிறார்கள். இந்த அன்பின் நீதியை பற்றி நாம் கதைக்காத போது தத்தம் சுயநல வாழ்வின் ஆழத்திற்கு செல்ல முற்படுகின்றோம்

கடவுளின் இப்பெரும் நீதி இன்றும் என்றும் நிலையானது. மாற்ற முடியாதது. இது இன்றும் எமக்குத் தேவை. எமது கடமையும், எமது பெரிய விருப்பமுமாக வேண்டியது.

## இத்தூய ஆன்மாக்களுக்காக நாம் செபிக்க கடமைப்பட்டுள்ளோம்

நாங்கள் அயலாருக்கு அன்பு செய்யவும் அவர்களுக்கு உதவிடவும் கடமைப்பட்டுள்ளோம். அவர்களது தேவை பெரிதானால், அவசரமானால் அவர்களுக்கு உதவிட வேண்டிய எமது கடமையும் இரட்டிப்பாகிறது. பிறருக்கு உதவுவது ஒரு சலுகையல்ல, செய்யலாம், செய்யாமலும் இருக்கக்கூடிய விடயமல்ல, மாறாக அது எமது கடமை. நாங்கள் கட்டாயமாக உதவிட விரைய வேண்டும்.

ஒரு ஏழை உயிர் வாழத் தேவையான உணவையோ, உறைவிடத்தையோ, மறுப்போமானால் அது காட்டுமிராண்டித்தனமான பாதகமாகும். நீரில் மூழ்கிக் கொண்டிருக்கும் மனிதனை பார்த்தும் பாராமல் போவது கொடூர செயலாகும். எங்களுக்கு இயலுமான போதும், இலகுவான போதும் உதவிடுவது மட்டுமில்லாமல், பரித்தியாகம் செய்து உதவி தேவைப்படுவோருக்கு உதவுவதே மிகவும் முக்கியமானதும் கட்டாயமானதும் ஆகும்.

உத்தரிக்கும் இடத்தில் இருக்கும் ஆன்மாக்களை விட எமது உதவி அவசரமாகத் தேவைப்படுவோர் இருக்க முடியுமா? இவ்வுலக வறுமையும், உணவின்மையும், கஷ்ட துன்பங்களையும் உத்தரிப்பு ஸ்தல துன்பங்களோடு ஒப்பிட முடியுமா? ஆனால் பலர் இவ்வுலக துன்பங்களுக்கு உதவிட முனைந்தாலும் உத்தரிப்பு ஸ்தல ஆன்மாக்களுக்கு உதவிட முன்வருவதில்லை. அவ்வான்மாக்களில் சிலர் எமது நண்பர்களும் குடும்பத்தாருமாய்க் கூட இருக்க இடமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவர்களுக்கு உதவுவதை கடவுள் விரும்புகிறார்

எது எப்படி இருந்தாலும் அவர்கள் கடவுளின் நண்பர்கள், அவர் அவர்களுக்கு உதவிட ஆசையாய் இருக்கிறார். அவர் அவர்களை பரலோக வீட்டிற்கு அழைக்கவும் ஆவலாய் இருக்கிறார். அவர்களால் அவரை மீண்டும் நோகப்படுத்த முடியாது, அவர்கள் அவரோடு முடிவில்லாத காலம் வரை வாழ ஆயத்தம் செய்பவர்கள். ஆனாலும் அவரது நீதியின் முன் அவர்களது பாவங்களுக்காக பரிகாரம் செய்யப்பட வேண்டும். அவரது பராமரிப்பின் பொருட்டு அவ்வான்மாக்களுக்கு உதவும் வரத்தை எமக்கு அருளியுள்ளார். அவர்களை விடுவிக்கும் சக்தியையும் அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் வழியையும் எம்மிடம் ஒப்படைத்துள்ளார். நாங்கள் அவர்களுக்கு உதவுவது அவரது திட்டம். அதை அவர் விரும்புகிறார். அவ்வாறு செயற்படும்போது நமக்கே நாம் உதவுவதாக எம்மை மேலும் ஆசீர்வதிக்கிறார்.

## நாம் அவர்களுக்கு உதவுவதை தேவதாயார் விரும்புகிறார்

மரியன்னை உத்தரிக்கும் இடத்திலுள்ள ஆன்மாக்களை தேற்றுவதற்கு துடிப்பதைப் போல எந்தவொரு இவ்வுலக அன்னையும் தம் இறக்கும் பிள்ளைகளை தேற்ற முன்வருவதில்லை என்றால் மிகையாகாது. ஏனெனில் அவர்களை பரலோக வீட்டிற்கு கொண்டு சேர்ப்பதில் அவர் பெருமகிழ்ச்சி அடைகிறார். மேலும் ஒரு ஆன்மாவையாவது உத்தரிக்கும் இடத்திலிருந்து மீட்கும்போது சொல்லிலடங்கா மகிழ்ச்சியை மாதா பெறுகிறார்.

## அத்தூய ஆன்மாக்கள் ஆயிரம் மடங்காக எமக்கு திருப்பித்தரும்

உண்மையிலேயே மீட்க்கப்பட்ட அத்தூய ஆன்மாக்களின் மகிழ்ச்சியையும் நன்றிக் கடனையும் வார்த்தையில் கூற முடியாது. அதனால் அவர்களுக்கு உதவியவர்களுக்கு மிகப் பெரிய உதவி காரியங்களைச் செய்ய இறைவனிடம் பரிந்து பேசுவர் என்பதை மனதிற் கொள்ள வேண்டும்.

பொலஞ்ஞாவின் புனித கத்தரீன் பின்வருமாறு கூறுகிறார், அதாவது "நான் புனிதர்களிடமிருந்து பெரிய உதவிகளைப் பெற்ற போதும் அதைவிடப் பெரிய உதவிகளை தூய ஆன்மாக்களின் மூலமாக பெற்றுக் கொண்டேன்" என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தரிப்பு ஆக்கினையிலிருந்து மீண்டவர்கள் பரலோக முக தரிசனத்தை பெற்றுக் கொண்டதும் மறக்காமல் எல்லை கடந்த விதமாய அவர்களுக்கு தமது நன்றிக்கடனைச் செலுத்துவர். கடவுளின் சிம்மாசனத்தின் முன் தெண்டனிட்டு வணங்கும் போதெல்லாம் தமக்கு உதவியவர்களையும் மறக்காமல் நினைவு கூருகின்றனர். அவர்களது செபங்களால் தமது நண்பர்களை ஆபத்துக்களிலிருந்து பாதுகாத்து தீமைகளிலிருந்தும் அவர்களை விடுவிக்கின்றனர். மேலும் நாங்களும் அவர்களோடு பர-லோக வீட்டை அடையுமளவும் எமக்காக பரிந்து பேசுவதை அவர்கள் நிறுத்திவிடுவதில்லை.

கத்தோலிக்கர் இந்த உண்மையை நன்கு உணர்ந்தால் உத்தரிப்பு ஸ்தல தூய ஆன்மாக்களுக்காக உதவிடுவதில், செபிப்பதில் கருத்தாய் இருப்பீர்கள்.

## இத்தூய ஆன்மாக்கள் எமது உத்தரிப்பு ஸ்தல காலத்தைக் குறைப்பார்கள்

இன்னுமொரு விசேட ஆசீர்வாதம் தான் இவ்வான்மாக்கள் தமக்கு உதவுபவர்களுக்கு இலகுவான, குறுகிய கால உத்தரிப்பு ஸ்தல இருப்பையோ அல்லது முற்றாக அதிலிருந்து விடுதலையையோ பெற்றுத்தருபவர் என்பதில் ஐயமில்லை.

அருளாளர் **ஜோன் மசியாஸ்** டொமினிக்கன் சபை சகோதரர் ஒருவர் உத்தரிப்பு இடத்து ஆன்மாக்கள் மீது தாம் கொண்ட பக்தியின் காரணமாக, அவர்களுக்காக செபமாலை செபித்ததனூடாக மட்டுமே பத்து இலட்சத்தி நாற்பதாயிரம் ஆன்மாக்களுக்கு விடுதலையளித்தார் எனக் கூறப்படுகின்றது. அதன் பிரதிபலனாக அவரது மரண நேரத்தில் அவை அவருக்கு உதவிட வந்து அவரை பரலோக வீட்டிற்கு கூட்டிச் சொல்லும் அளவிற்கு அவருக்கு விசேட அருளைப் பெற்றுக் கொடுத்தனர். இவ்விடயத்தை அவருக்கு அருளாளர் பட்டம் அளித்த போது திருச்சபையால் அதற்கான கட்டளைப் பத்திரத்திலும் இச்சம்பவம் குறிப்பிடப்பட்டது.

நன்கு கற்றுத்தேர்ந்த **கர்தினால் பெரோணியாஸ்** கூட இப்படிப்பட்ட சம்பவம் ஒன்றை பின்வருமாறு விளக்குகின்றார். அதாவது தாம் ஒருமுறை மரணப்படுக்கையில் இருந்த மனிதர் ஒருவருக்கு உதவுவதற்கு அழைக்கப்பட்ட போது தீடிரென புனித ஆன்மாக்களின் படை ஒன்று தோன்றி இறக்கும் மனிதரை தேற்றி இறுதி நேரத்தில் தீங்கு விளைவிக்க இருந்த தீய ஆவிகளை விரட்டி அவருக்கு உதவியதாம். யாரென்று விசாரித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது. தாங்கள் இம்மனிதரின் செபத்தாலும் நற்செயல்களாலும் உத்தரிப்பு இடத்திலிருந்து விடுதலை அடைந்த எட்டாயிரம் ஆன்மாக்களென்றும கடவுள அவருக்கு உதவிடவும் ஒரு கணமும் உத்தரிப்பு இடத்தில் தங்கக்கூடாது அவரை பரலோகம் கொண்டு செல்லவும் தம்மை அனுப்பியதாகவும் கூறினார்.

**புனித ஜெத்ருத்தம்மாள்** இறுதி நேரத்தில் பயங்கரமாய்ச் சோதிக்கப்பட்டார். ஏனெனில் தீயவன் மரணத் தறுவாயில் பயங்கரமானதும் சூழ்ச்சிமிக்கதுமான சோதனைகளை செய்து ஆன்மாக்களை குழப்பத்தில் ஆழ்த்துவதுண்டு இவ்வாறாக, தீயவன் அவர் பலகாலமாக தமது துன்பங்களையெல்லாம் ஆன்மாக்களுக்காக ஒப்புக் கொடுத்தாலும் அவர் நீண்ட காலம் உத்தரிப்பு இடத்து நெருப்பில் கழிக்க வேண்டும் என பயமுறுத்தி அவரது ஆன்ம அமைதியைக் கெடுக்க எத்தனித்தான். நம் ஆண்டவரும் அப்புனிதையின் செப தபத்தால் விடுவிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்காக ஆன்மாக்களை அனுப்புவதை விட தாமே தோன்றி சாத்தானை விரட்டியடித்து புனிதையைத் திடப்படுத்தினார். மேலும் பல்லாயிரக்கணக்காக புனித ஆன்மாக்களை அவர் விடுவித்ததற்கு கைமாறாக நேரடியாக பர-லோகம் கொண்டு செல்வதாகவும் அவரது பேறுபலன்களை நூறுமடங்காக பொழியச் செய்வதாகவும் வாக்களித்தார்.

**அருளாளர் ஹென்றி சூசோ** ஒரு டொமினிக்கன் சபைத் துறவியாவார். அவர் தனது சக துறவியோடு ஒரு உடன்படிக்கையை மேற்கொண்டார். அதாவது இருவரில் ஒருவர் மரித்ததும் மற்றவர் ஒவ்வொரு வாரமும் இரண்டு திருப்பலிகளையும் மற்ற செபங்களையும் இறந்தவரின் ஆன்மாவுக்காக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று, இவ்வாறிருக்க அவரது நண்பர் முதலில் இறந்தார். தாம் கொடுத்த வாக்குறுதியின் படி திருப்பலிகளை நிறைவேற்றத் தொடங்கினார். நீண்ட காலம் சென்றதும் தூய வாழ்வு வாழ்ந்த தம் நண்பரின் ஆன்மா பரலோக வீட்டை அடைந்திருக்கும் என நினைத்து அவருக்காக திருப்பலிகளை நிறைவேற்றுவதை நிறுத்திவிட்டார்.

ஒரு நாள் திடீரென அந்நண்பரின் ஆன்மா அவருக்கு தோன்றி தாம் உத்தரிக்கும் இடத்தில் மிகவும் துன்புறுவதாகவும் "அன்புச் சகோதரரான ஹென்றி, எனக்காக திருப்பலிகளை ஒப்புக் கொடுங்கள் இயேசுவின் விலைமதிப்பல்லாத இரத்தத்தால் ஏற்படும் குளிர்ச்சியே எனக்கு மிகவும் தேவைப்படுகிறது" என்று கதறினார். ஆகவே, அருளாளர் ஹென்றியும் மீண்டும் அவருடைய சகோதர துறவிக்காக திருப்பலிகளை ஒப்புக் கொடுக்கவும், செபிக்கவும் தொடங்கினார். அவரது விடுதலையை உறுதியாக அறியுமளவும் அவ்வாறு செய்தார். இவ்வாறு உதவிய தம் நண்பருக்காக விடுதலையடைந்த அந்த ஆன்மா நன்றிக்கடன் தீர்க்காமல் இருக்குமா? நிச்சயமாக பல மடங்காகத் திருப்பிச் செலுத்தும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# V

## நாம் எவ்வாறு இப்புனித ஆன்மாக்களுக்கு உதவிடலாம்?

1. உத்தரிக்கும் இடத்திலுள்ள ஆன்மாக்களுக்காக செபிக்கும் சபையில் சேர்ந்து செபிப்பதும் இலகுவான காரியமே.

அ). தூய ஆன்மாக்களுக்காக ஏதாவது ஒரு செபத்தை செபிப்பது.

ஆ). ஏதாவது ஒரு நாளில் பெரும்பாலும் ஞாயிறு தினத்தில் செய்யும் நற்செயல்கள், செபங்கள் துன்பங்கள் மற்றும் ஞானப்பலன்களை உத்தரிப்பு ஸ்தல ஆன்மாக்களுக்குாக ஒப்புக் கொடுததல்.

இ). சபைக்கு தானதர்மங்களை செய்தல்.

ஈ). சபையில் இன்னும் பலரை உறுப்பினர்களாகச் சேர்த்தல்.

அவ்வாறு சேர்ந்து செபிக்க விரும்புபவர்கள் திரு. ஹிகான் நாணாயக்காரவுடன் தொடர்பு கொள்ளவும்.

Mr. Gihan,
721/B,Temple Road, Kohalvila,
Dalagama,
Kelaniya
Tel : 071 - 6243316; 071 - 8563646

2. இத்தூய ஆன்மாக்களுக்காக திருப்பலிகளை ஒப்புக் கொடுப்பது அவர்களை விடுவிப்பதற்கான வல்லமையுள்ள செயல் முறையாகும்.

3. திருப்பலிகளை ஒப்புக் கொடுக்க முடியாத நிலையிலுள்ளோர் இந்நோக்கத்திற்காக திருப்பலியில் பங்கு கொண்டு ஒப்புக் கொடுத்தல் மிகவும் விரும்பத்தக்கது.

சாதாரண சம்பளம் எடுக்கும் இளம் குடும்பஸ்தர் ஒருவர் தனது மனைவி இறந்த பின்னர் சொன்னதாவது "எனது மனைவியின் ஆன்மாவுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்க விரும்பினேன் என்னால் நிறைய திருப்பலிகளை காணிக்கை கொடுத்து ஒப்புக்கொடுக்க முடியாததால் 1000 திருப்பலிகளில் பங்கு பற்றி அவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக ஒப்புக்கொடுக்கப் போகின்றேன்".

4. பூரண பலன்கள் நிறையவேயுள்ள திருச்செபமாலையை செபிப்பதும், அவ்வாறே சிலுவைப் பாதையைத் தியானிப்பதும் மிகச் சிறந்த வழிகளாகும்.

உதாரணமாக அருளாளர் மசியாசின் ஜோன் பல இலட்சக்கணக்காக ஆன்மாக்களை உத்தரிப்பு இடத்திலிருந்து விடுவிப்பதற்கு திருச்செபமாலையையே செபித்து அதன் பலன்களை அவர்களுக்காக ஒப்புக் கொடுத்தார் என்றும் முன்னர் வாசித்தறிந்தோம்.

5. இன்னுமொரு இலகுவான முறைதான், தொடர்ச்சியாக திரும்பத் திரும்பச் சொல்லக்கூடிய சிறு செபங்கள். பலர் "இயேசுவின் திரு இருதயமே நான் உம்மில் நம்பிக்கை வைக்கின்றேன்" என்றோ அல்லது "இயேசு" என்ற ஒரு வார்த்தையையோ பல முறை சொல்லி செபிப்பதுண்டு. இச்செபங்கள் தூய ஆன்மாக்களுக்கு ஆறுதலையும் தருகிறது.

இச்சிறு செபங்களை 1000 தடவை செபிப்பவர்கள் 300,000 நாள் பூரண பலனை அடைகிறார். இதன்படி பல ஆன்மாக்களுக்கும் ஆறுதல் அளிக்க முடிகிறது. ஒரு நாளைக்கே இவ்வாறெனில்; ஒரு மாதம், ஒரு வருடம் என்று அளவிடமுடியாத எத்தனையோ ஆன்மாக்களுக்கு உதவிட முடியும். இச்சிறு செபங்களைச் சொல்லாமற் போனால் என்ன அநியாயம். இப்படிப்பட்ட செபங்களை ஒரு நாளில் 1000 தடவைகள் செபிப்பது கடினமான காரியம் கிடையாது. அப்படிச் செய்ய முடியாவிட்டாலும் 500 தடவைகளோ அல்லது 200 தடவைகளோ கூட சொல்லலாம்.

6. இன்னுமொரு விசேட செபம்தான்; "நித்திய பிதாவே, நான் உமது தெய்வீக மகனான இயேசுவின் விலைமதிப்பில்லாத திரு இரத்தத்தை, இன்று உலகமெங்கும் ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலிகளோடு ஒன்று சேர்த்து உத்தரிப்பு இடத்திலுள்ள எல்லாத் தூய ஆன்மாக்களுக்காகவும், எங்குமுள்ள பாவிகளுக்காகவும், உலகத் திருச்சபையிலுள்ள பாவிகளுக்காககவும் எனது வீட்டிலும், குடும்பத்திலும் உள்ள பாவிகளுக்காகவும் ஒப்புக் கொடுக்கின்றேன் ஆமென்."

நம் ஆண்டவர், இச்செபத்தை ஒரு நாளில் பல தடவை செபித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த புனித ஜெத்ரூத்தம்மாளுக்கு ஆயிரக்கணக்கான ஆன்மாக்கள் உத்தரிப்பு இடத்தை விட்டு பரலோகம் செலவதைக காணபித்தார் எனச் சொல்லப்படுகின்றது.

7. இன்னுமொரு வீரச் செயல்தான், ஒருவர் தன் வாழ்நாளில் செய்யும் நற்காரியங்களையும், இறந்த பின்னர் அவருக்காக ஒப்புக் கொடுக்கப்படும் பரிகாரங்களையும் உத்தரிப்பு இடத்து ஆன்மாக்களுக்காக ஒப்புக் கொடுத்தல். கடவுள் ஒரு ஏழைக்கு தன் பெயரால் செய்யும் உதவிக்கே பல மடங்கு கைமாறு தருகின்றார் என்றால், அவர் மிகவும் அன்பு செய்யும் ஆன்மாக்களுக்காக பரிகாரச் செயல்களை ஒப்புக் கொடுப்பவர்களுக்கு எவ்வளவு தூரம் கைமாறு அளிப்பார் என்று நினைத்துப் பார்க்க முடியும்.

இச்செயல்களுக்காக குருக்களையோ, பொது நிலையினரையோ எந்தவொரு நபருக்காகவோ, தேவைக்காகவோ செபிக்கவோ, திருப்பலி ஒப்புக் கொடுக்கவோ வேண்டாமெனச் சொல்லவில்லை, மாறாக இதைக் கருத்திற் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## தான தர்மங்கள் தூய ஆன்மாக்களுக்கு உதவும் முறையாவது

**புனித மாட்டின்** ஒரு முறை தனது மேலாடையில் அரைவாசியை ஒரு ஏழைக்குக் கொடுத்தார். பின்னர் அதை அவர் கிறிஸ்துவுக்கே கொடுத்தார் என்பது நிரூபணமானது. அதாவது, நம் ஆண்டவர் அவருக்கு கனவில் தோன்றி அதற்காக நன்றி செலுத்தினார்.

டொமினிக்கன் சபையைச் சார்ந்த **அருளாளர் ஜோர்டன்** கடவுளின் பெயரால் கேட்கப்படும் தருமங்களுக்கு ஒருபோதும் இல்லையென்று சொல்வதில்லை. ஒரு நாள் அவர் தனது பணப்பையை எடுத்துவர மறந்துவிட்டார். ஏழை மனிதர் ஒருவர் கடவுளின் மேல் கொண்ட அன்பின் பொருட்டு தனக்கு உதவும்படி கேட்டுக் கொண்டார். அதை மறுக்க மனமில்லாத மாணவனான ஜோர்டன் தான் மிகவும் விரும்பிய இடைப் பட்டிணை எடுத்து அந்த ஏழைக்கு கொடுத்தார். சிறிது நேரத்திற்குப் பிறகு அவர் ஒரு தேவாலயத்திற்குப் போன போது அவர் கொடுத்த இடைப்பட்டி திருச்சிலுவையில் இருந்து யேசுவின் இடையில் இருந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டார். அவரும் தனது தானத்தை கிறிஸ்துவுக்கே கொடுத்தார். நாமும் அவ்வாறே கொடுக்கும் தான தர்மங்கள் கிறிஸ்துவுக்கே போய்ச் சேருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. எம்மால் கொடுக்கக் கூடிய அளவு தான தர்மங்களைக் கொடுப்போம்.

2. எம்மால் ஒப்புக் கொடுக்கக்கூடிய அளவு திருப்பலிகளை ஒப்புக் கொடுக்கச் செய்வோம்.

3. எம்மால் பங்கு பற்றக் கூடிய திருப்பலிகளின் அளவுக்கு பங்கொடுப்போம்.

4. எமது துன்பங்கள், வேதனைகள் அனைத்தையும் தூய ஆன்மாக்களின் விடுதலைக்காக ஒப்புக் கொடுப்போம்.

இவ்வாறு செய்யும் போது பல்லாயிரக்கணக்காக ஆன்மாக்களை உத்தரிப்பு இடத்திலிருந்து எம்மால் விடுவிக்க முடியும். அவர்களும் எமக்கு ஆயிரம் மடங்கு கைமாறு செய்வர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VI

## தூய ஆன்மாக்களுக்கு உதவுபவர்களுக்கு அவர்கள் செய்யும் கைமாறு என்ன?

**புனித அல்போன்ஸ் லிகோரியார்** பின்வருமாறு கூறுகின்றார்; "தூய ஆன்மாக்களுக்கு தங்களுக்காக எதையும் செய்ய முடியாவிட்டாலும், எங்களுக்கு பல வரப்பிரசாதங்களை பெற்றுத்தர முடியும். அவர்களை புனிதர்களைப் போல பரிந்துரையாளர்கள் எனச் சொல்ல முடியாவிடினும், கடவுளின் மதுரமான பராமரிப்பின் பொருட்டு பல்வேறு நன்மைகளையும், தீமைகளிலிருந்தும், நோய்களிலிருந்தும், பயங்கரங்களிலிருந்தும் விடுதலையையும் எமக்குப் பெற்றுத் தர வல்லன" என்கின்றார்.

நாங்கள் முதலில் பார்த்தது போல நாம் செய்யும் நன்மைகளுக்கு ஆயிரம் மடங்காக அவை திருப்பித் தருகின்றன என்பதில் சந்தேகமில்லை. தூய ஆத்மாக்கள், நமக்கு தாராளமான, வல்லமைமிக்க நண்பர்கள் என்பதற்கு மேற்கோள் காட்டும் பொருட்டு நடைபெற்ற பல நூறு நிகழ்ச்சிகளில் ஒரு சில நிகழ்ச்சிகளை பார்ப்போம்.

### தாயை கண்டுபிடித்த மகள்

பிரான்சு நகரில் ஒரு ஏழை ஊழியக்காரப் பெண், உத்தரிக்கின்ற ஆத்மாக்களைப் பற்றி பிரசங்கம் ஒன்று கேட்டதிலிருந்து இவர்களைப் பற்றி நீங்காத நினைவுடனே இருந்தாள். நித்திய கொடிய வாதைகளில் இவ்வான்மாக்கள் படும் அகோர துன்பத்தையும், உலகிலுள்ள இவர்களது நண்பர்களால் எளிதில் மறக்கப்பட்டு, புறக்கணிக்கப்படுவதையும் கேள்வியுற்று பெரிதும் மனம் நொந்தாள்.

பிரசங்கம் செய்தவர், மற்ற காரியங்களைவிட, உத்தரிக்கின்ற ஸ்தலத்திலிருந்து விடுதலை பெறும் தறுவாயில் இருக்கும் பல ஆத்மாக்கள், ஒரு பலி பூசை ஒப்புக் கொடுத்தால், உத்தரிப்புக் கடன் முடிந்து விடுதலை பெறும் நிலையில் இருப்பதாகவும், ஆனால் அந்த ஒரு திருப்பலி ஒப்புக் கொடுக்க மறுக்கப்பட்டோ, நிறுத்தி வைக்கப்பட்டோ, புறக்கணிக்கப்பட்டோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதால், பல வருடங்களாக அகோர நெருப்பில் இவ்வான்மாக்கள் துன்பப்படுவதையும் வலியுறுத்திக் கூறினார். பிரசங்கத்தைக் கேட்ட இப்பணிப்பெண் எவ்வளவு செலவு செய்தாகிலும், மாதம் ஒரு பலிப்பூசையை மோட்சத்திற்கு செல்ல மிக அத்தியாவசியத் தேவையிலிருக்கும் ஓர் ஆன்மாவிற்காக ஒப்புக் கொடுப்பது என முடிவு செய்து, சிரமங்கள் இருப்பினும் தவறாது தான் முடிவு செய்தபடியே ஒப்புக் கொடுத்து வந்தாள்.

ஒரு முறை தன் எஜமானியம்மாவுடன் பாரீஸ் பட்டணம் சென்றபோது உடல் நலக்குறைவினால் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற வேண்டியதாக இருந்தது. நீண்ட நாட்கள் இருக்க வேண்டியதாக இருந்ததால், எஜமானியம்மாள், உடல் நலம் தேறிய பிறகு வீட்டிற்கு வரக் கூறவிட்டு தான் மட்டும் திரும்ப ஊருக்குச் சென்று விட்டாள்.

உடல் நலம் தேறிய பிறகு மருத்துவமனையை விட்டு வெளியே புறப்படுகின்ற நாளிலே பணிப்பெண்ணின் கையில் இருந்ததோ அரை ரூபாய் மட்டுமே. "தான் எங்கே போவது? என்ன செய்யப் போகின்றோம்?" என யோசித்துக் கொண்டிருந்தபோதுதான், அந்த மாதம் உத்தரிக்கின்ற ஆத்துமாவிற்காக ஒப்புக் கொடுக்கவேண்டிய திருப்பலியை செய்யவில்லை என நினைத்து வருத்தப்பட்டாள். கையிலிருந்த பணமோ அவளது அன்றைய உணவுக்கு மட்டுமே போதுமானதாகவிருந்தது. இருப்பினும் ஆண்டவர் என்னைக் கைவிடமாட்டார் என உறுதி கொண்டு, கோவிலுக்குச் சென்று, குருவானவரிடம், தன்னிடமிருந்த பணத்தை மோட்சத்திற்கு போகிற தறுவாயிலிருக்கும் ஓர் உத்தரிக்கிற ஆத்மாவுக்காக பலிப்பூசையை ஒப்புக் கொடுக்க கொடுத்தாள். குருவானவருக்கு அப்பெண்ணிடம் இருந்த கடைசிப் பணம் அதுதான் எனத் தெரியாது. இப்பணிப்பெண் பக்தியோடு பலிப்பூசையில் பங்கேற்றுவிட்டு, தான் இனி என்ன செய்யப் போகின்றோம்? என்ற சஞ்சலத்தோடு வெளியே சென்றாள்.

ஒரு மரியாதையான இளைஞன் இவரது வாட்டமான முகத்தைக் கண்டு ஏதாவது உதவி வேண்டுமா என கேட்க, தன்னுடைய கதையை சுருக்கமாக அவனிடம் கூறினாள். அவ்விளைஞன் தனது கதையை கவனமுடன் கேட்டதில் ஓர் ஆறுதலையும், நம்பிக்கையையும் பெற்றவளாக தனக்கு ஒரு வேலை கிடைத்தால் மிகவும் உதவியாக இருக்கும் என்பதையும் தெரிவித்தாள். "உனக்கு உதவி செய்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைவேன். எனக்குத் தெரிந்த அம்மா ஒருவர் இப்போது வேலைக்கு ஆள் தேடிக் கொண்டிருக்கின்றார்கள், என்னோடு வா" எனக் கூறி அருகிலிருந்த ஒரு வீட்டிற்கு அழைத்துச் சென்று, "இங்கு சென்று விசாரித்துப்பார், உனக்கு நிச்சயமாக வேலை கிடைக்கும்" என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பெண்ணின் அழைப்பு மணி சத்தத்தைக் கேட்டு கதவைத் திறந்த அம்மையாரிடம "அமமா உங்களுக்கு பணி செய்ய ஒரு வேலைக்காரியைத தேடுகிறீர்களென்று கேள்விப்பட்டேன். நான் தற்சமயம் வேலை எதுவுமின்றி உள்ளேன், வேலை கொடுத்தால் மிக்க மகிழ்ச்சியாக வேலை செய்வேன்" எனக் கூறினாள்.

ஆச்சிரியமடைந்த அந்த அம்மா, "யார் உன்னிடம் எனக்கு வேலைக்கு ஆள் தேவை என்று சொன்னார்கள், ஏனென்றால் என்னிடம் இதுநாள் வரை பணி செய்து கொண்டிருந்த பெண்ணை இப்போதுதான் வேலையை விட்டு நிறுத்தினேன், அவளை வழியில் சந்தித்தயா? எனக் கேட்டார்.

"இல்லை அம்மா, உங்களுக்கு ஆள் தேவை என என்னிடம் கூறியது ஒரு மரியாதையான இளைஞன்" இதைக் கேட்டு வியப்படைந்த அம்மா, "எந்த இளைஞனுக்கும், ஏன் ஒருவருக்குமே எனக்கு தற்சமயம் வேலைக்கு ஆள் தேவையுள்ளது என்பது தெரியாதே" என்றார்.

பணிப்பெண் பிரமித்தவளாக, வீட்டின் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த ஒரு புகைப்படத்தைக் காட்டி, "அம்மா, இந்தப் படத்தில் இருப்பவர்தான் என்னை இங்கு அனுப்பினார்" என்றாள். பெருமூச்சு விட்டவராக அந்த அம்மா, "பெண்ணே, அது என்னுடைய ஒரே மகன். அவன் இறந்து ஒரு வருடத்திற்கு மேல் ஆகிவிட்டது" என்று சொல்ல

"அது எனக்குத் தெரியாது, ஆனால் இங்கு சென்றால் வேலை கிடைக்கும் என உறுதியளித்து கதவு வரை என்னை அழைத்து வந்து விட்டுச் சென்றவரை, எங்கு பார்த்தாலும் தவறாது அடையாளம் கண்டு கொள்வேன். அவர் கண்களுக்கு மேல் ஒரு தளும்பு அடையாளம் கூட இருந்தது என இப்பெண் சொல்லக் கேட்டு மிக்க ஆச்சரியடைந்த அந்த அம்மா நடந்த அனைத்து சம்பவங்களையும் கேட்டறிந்தார்.

குறிப்பாக தன்னிடமிருந்த கடைசி பணத்தையும் மோட்சத்திற்கு போகிற தறுவாயிலிருந்த கடைசி ஆத்துமாவிற்காக பலிப்பூசை ஒப்புக் கொடுத்ததைக் கேட்டு அவளைக் கட்டியணைத்து, "நீ எனக்கு பணிப்பெண்ணல்ல. என் மகள். இன்று கண்ட இளைஞன் என் மகன்தான். ஒரு வருடத்திற்கு முன் இறந்து, நீ இன்று ஒப்புக் கொடுத்த திருப்பலியினால் உத்தரிக்கிற ஸ்தலத்திலிருந்து மோட்சத்துக்குப் போயிருப்பானென்று எனக்கு உறுதியாகத் தெரிகிறது" என்று சொல்லி, அவளைத் தன்னுடைய வீட்டிலே மகளாக ஏற்றுக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு ஏழைச் சிறுவன் ஆயராக, கர்தினாலாக பின்னர் புனிதராக மாறியது.

பீட்டர் டேமியன் பிறந்த சில காலங்களுள், அடுத்தடுத்து அவருடைய தாயும், தந்தையும், இறந்து விட்டார்கள். அவருடைய சகோதரர்களுள் ஒருவர் இவரைத் தன் பாதுகாப்பில் ஏற்றுக் கொண்டார். ஆனால் கடினமாக வேலை வாங்கியதுடன், சரிவர உணவும், உடையும் கொடுக்காமல் கொடூரமாகவும் நடத்தினார். ஒரு நாள் பீட்டர், அதிக விலையுள்ள ஒரு வெள்ளிப் பொருளைக் கண்டார். வெள்ளிக்கு சொந்தக்காரரைக் கண்டு பிடிக்க முடியாததால், மன உறுத்தலின்றி பீட்டரே அதை பயன்படுத்திக் கொள்ளலாம் என அவருடைய நண்பர் தெரிவித்துவிட்டு சென்று விட்டார்.

பீட்டருக்கு தனது எந்தத் தேவையை நிறைவேற்றிக் கொள்வது என்பதில் சிக்கல். ஏனென்றால் அவருக்கு நிறையத் தேவைகள் இருந்தன. இதைப் பற்றி சிறுவன் மிகவும் ஆலோசித்துக் கொண்டிருந்தபோதுதான், தனது தேவைகளுக்காக செலவு செய்வதைவிட, ஒரு மிக நல்ல காரியத்துக்காக அதாவது உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களுக்காக, குறிப்பாக தனது பாசமிக்க பெற்றோர்களின் ஆத்துமங்களுக்காக திருப்பலி ஒப்புக் கொடுத்தால் என்ன எனத் தோன்றி, மிக்க ஒறுத்தலுடன் பலிப்பூசையை ஒப்புக் கொடுத்து நல்ல எண்ணத்தை செயலிலும் காண்பித்தார். அந்த நாள் முதல் பீட்டர் டேமியனின் வாழ்வில் பெரும் மாறுதல் ஏற்பட்டது. உத்தரிக்கிற ஆத்மாக்கள் அவருடைய தியாகத்திற்கு ஈடாக தாராளமாக கைம்மாறு வழங்கினர்.

அவருடைய குடும்பத்தின் மூத்த சகோதரர், பீட்டர் வசித்து வந்த சகோதரனின் வீட்டிற்கு வந்த போது சிறுவன் பீட்டர் படும் கஷ்டங்களைக் கண்டு அதிர்ச்சியுற்றார். சிறுவனை தன்னுடைய பொறுப்பில் ஏற்றுக் கொண்டு, சொந்த மகனாக பாவித்து உணவும், உடையும் கொடுத்து அன்போடு பராமரித்ததோடு, அவரை படிக்கவும் வைத்தார். ஆசீர்வாதம் மேல் ஆசீர்வாதம் தொடர ஆரம்பித்தது. பீட்டரின் அற்புதமான திறமைகள் அறியப்பட்டு, அதிவிரைவாக குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். ஆயராக தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறிது காலத்திற்குள்ளாகவே கர்தினாலாகவும் உயர்த்தப்பட்டார். அவருடைய பரிசுத்தமான வாழ்வின் பொருட்டு பல புதுமைகள் நடைபெற்றதால், அவர் மரித்தபின் புனிதர் பட்டமும் பெற்று, திருச்சபையின் வேத பண்டிதராகவும் போற்றப்படுகின்றார். உத்தரிக்கின்ற ஆத்மாக்களுக்காக ஒரு திருப்பலி பூசையை ஒப்புக் கொடுத்ததன் பலனாக பீட்டர் டேமியனின் வாழ்வில் மாற்றம் ஏற்பட்டு அடுத்தடுத்து வரப்பிரசாதங்களால ஆசீர்வதிக்கப்பட்டவர் ஆனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முக்கிய பிரச்சினை பற்றி விவாதிப்பதற்காக குருக்கள் பலருக்கு உரோமைக்கு வருமாறு அழைப்பு விடப்பட்டிருந்தது. அவர்கள் வசம் முக்கிய ஆவணங்களும், கணிசமான பெரும் தொகையும் பாப்பரசரிடம் ஒப்படைக்கும் பொருட்டு கையில் இருந்தது. கொடிய கொள்ளையர் கூட்டம் வசித்து வந்த அப்பெனைன் என்ற ஊரின் வழியாகத்தான் செல்ல வேண்டியிருந்ததால் நம்பிக்கையான ஊர்தி ஓட்டுநரை ஏற்பாடு செய்தனர். அக்காலத்தில் மலையை குடைந்த குகைப்பாதைகளோ, புகைவண்டியோ இருக்கவில்லை. குருக்கள் அனைவரும் தங்களை உத்தரிக்கிற ஆத்மாக்கள் பாதுகாப்பில் ஒப்புவித்து, அவர்களுக்காக ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை, உத்தரிக்கிற ஆன்மாக்களுக்கான கட்டளை செபம் செய்வதெனவும் தீர்மானித்து பயணம் மேற்கொண்டனர்.

சரியாக மலையின் நடுப்பகுதியைக் கடக்கும்போது ஓட்டுநர் அபயக்குரல் எழுப்பினார். அதே சமயம் குதிரைகளை அடித்து வண்டியை வெகு வேகமாக செலுத்தத் துவங்கினார். குருக்கள் சுற்று முற்றும் பார்த்தபோது, கொள்ளைக் கூட்டத்தினர் கையில் துப்பாக்கி ஏந்தியவர்களாக, சுட்டுவிட தயார் நிலையில் நிற்பதைக் கண்டனர். குருக்கள் அப்போது முற்றிலும், கொள்ளைக் கூட்டத்தினரின் கருணை தயவில் இருந்தனர். ஆனால் ஒரு குண்டு கூட வெடிக்கப்படவில்லை.

ஒரு மணி நேரம் தலைதெறிக்க வண்டியை செலுத்திய ஓட்டுநர், குருக்களைப் பார்த்து, "நாம் எப்படித் தப்பினோம் என்றே எனக்குப் புரியவில்லை. இந்த ஈவு இரக்கமற்றவர்கள் யாரையுமே தப்ப விட்டதில்லை" என்றார். குருக்கள் தாங்கள் தப்பியது உத்தரிக்கிற ஆத்துமாக்களினால்தான் என்று உறுதியாக நம்பிக்கை கொண்டனர். இவர்களது நம்பிக்கை சிறிதும் ஐயமின்றி ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய சத்தியம் என்பது பின் நாட்களில் உணர்ந்து கொண்டனர்.

உரோமை நகரில் வேலை முடித்த பிறகு, இவர்களுள் ஒரு குருவானவர் மட்டும், அங்குள்ள சிறையின் மடாதிபதியாக நியமிக்கப்பட்டதால் அந்நகரிலேயே இருந்து விட்டார். சிறிது காலத்திற்குப் பிறகு இத்தாலி தேசத்தில் பல தொடர் கொலைகளைச் செய்த தீவிர கொள்ளைக்காரன் ஒருவன் பிடிபட்டு, மரண தண்டனை தீர்ப்பு பெற்றான். தூக்கு தண்டனை நிறைவேற்றுவதற்காக இக்குருவானவர் மடாதிபதியாக இருந்த சிறைச்சாலையில் அடைக்கப்பட்டான். கைதி மனம் திரும்பும் பொருட்டு குருவானவர் அடிக்கடி சிறையில் அவனை சந்தித்து, தமது அனுபவங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிர்ந்து கொண்டார். அப்படி ஒரு நாள் தமக்கு அப்பெனைன் ஊரில் நடைபெற்ற சம்பவத்தை விபரிக்க, அதை அதிக ஈடுபாட்டுடன் கேட்ட கைதி முடிவில், "குருவே, அந்த கொள்ளைக் கூட்டத்தின் தலைவன் நான்தான். உங்கள் கூட்டத்தினரிடமிருந்த பணத்தை அபகரித்துவிட்டு உங்களை எல்லாம் கொலை செய்ய திட்டமிட்டு செயல்பட்டோம். ஆனால் கண்களுக்குப் புலப்படாத ஒரு சக்தி எங்களை எதிர்த்து நின்று, உங்களைத் தப்புவித்தது என்று கூறினார். உண்மையை உணர்ந்து மனம் மாறி தனது பாவங்களுக்காக மனம் வருந்தி பரிகாரம் செய்து நிம்மதியாக இறந்தான்.

## ஞாபக சக்தி குறைபாட்டை நிவர்த்தி செய்த 9ம் பத்திநாதர்.

வணக்கத்திற்குரிய பாப்பரசர் 9ம் பத்திநாதர், ஒரு பக்தியான நேர்மையான தோமாசா என்ற குருவானவரை, ஆயராக ஒரு மேற்றிராசனத்திற்கு தேர்ந்து எடுத்தார். ஆனால் அக்குருவானவர், பெரும் பொறுப்புகளை எண்ணி அச்சமுற்றவராய், தன்னை அப்பொறுப்பிலிருந்து விடுவிக்குமாறு வேண்டினார். ஆனால் குருவானவரது நேர்மையான குணங்களை அறிந்த பாப்பரசரோ மறுத்துவிட்டார்.

நிலைமையை உணர்ந்தவராய், பாப்பரசரிடம் நேரில் பேசுவதற்கு உத்தரவு பெற்று, மீண்டும் தன் கோரிக்கையை ஏற்க வேண்டினார். ஆனால் மிகுந்த அன்போடு அவரை வரவேற்ற பாப்பரசரோ தன்னுடைய முடிவிலேயே உறுதியாக இருந்தார்.

கடைசியாக தோமாசா குரு, தனக்கு ஞாபக சக்தி மிகவும் குறைவாக இருப்பதால் உயர்ந்த பதவியில் இருந்து பணியாற்றுவதற்கு அது பெரும் தடையாக இருக்கும் என்பதாலேயே, தனக்கு ஆயர் பதவி வேண்டாம் என்பதை எடுத்துரைத்தார்.

9ம் பத்திநாதர் சிரித்தவாறு, "அன்பான குருவே, என் தோளில் நான் ஏற்றிருக்கும் உலக திருச்சபையின் பொறுப்புகளை ஒப்பிட்டால் உமது மேற்றிராசனம் மிகவும் சிறியது, அதன் பொறுப்புகளும் எளியதே. நானும் ஒரு காலத்தில் உங்களைப்போல் ஞாபக மறதியினால் அதிக சிரமப்பட்டேன். ஆனால் உத்தரிக்கிற ஆத்மாக்களுக்காக தினமும் தீவிரமாக செபம் செய்து வந்தேன். அவர்கள் அதற்கு ஈடாக எனக்கு நல்ல ஞாபக சக்தியினை பெற்றுத் தந்துள்ளார்கள். நீங்களும் என்னைப் போலவே செய்யுங்கள், ஒரு நாள் கண்டிப்பாக பலன் பெற்று மகிழ்வீர்கள்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எந்த அளவையால் அளப்போமோ,**

**அதே அளவையில் கூடுதலாகவே கிடைக்கும்.**

போஸ்டன் நகரில், மரித்த விசுவாசிகளுக்காக சங்கத்தில் உறுப்பினராக சேர்ந்த சிறு தொழிலதிபர் ஒருவர், செபம் செய்வதற்காகவும், பலிப்பூசைகள் ஒப்புக் கொடுக்கும் பொருட்டும், ஆண்டுதோறும் ஏராளமான பணத்தைக் கொடுத்து வந்தார்.

சங்கத்தின் இயக்குனராக இருந்த குருவானவருக்கு இது ஆச்சரியமாக இருந்தது. ஏனென்றால் அத்தொழிலதிபர் அந்த அளவிற்கு பெரும் பணக்காரர் அல்ல. ஒரு நாள் குரு அவரிடம், கொடுக்கும் பணம் முழுவதும் அவரது சொந்தப் பணமா அல்லது மற்றவர்களிடம் தானமாக அன்பளிப்புத் தொகை பெற்று சேர்த்துக் கொடுக்கப்பட்டதா என மென்மையாக வினாவினார்.

அவர், "குருவே, நான் கொடுக்கும் பணம் முழுவதும் எனது சொந்தப் பணம், ஆச்சரியப்பட வேண்டாம். நான் பெரும் செல்வந்தன் இல்லைத்தான், என்னுடைய தகுதிக்கு மீறி நான் கொடுப்பதாக நீங்கள் நினைக்கலாம். ஆனால் அப்படி அல்ல, நான் தான தர்மங்கள் செய்வதன் மூலம் அதிக பணத்தை இழக்காத வகையில், தர்மங்கள் செய்யும் பணத்தைக் காட்டிலும் அதிக அளவு பணத்தை நான் திரும்ப தொழிலில் பெற வேண்டும் என்பதில், உத்தரிக்கிற ஆன்மாக்கள் கண்ணும் கருத்துமாக உள்ளனர். தாராள குணத்தில் அவர்களை ஜெயிக்க யாராலும் முடியாது" என்றார்.

**கொலோன் நகர பதிப்பக உரிமையாளர்**

கொலோன் நகரத்தில் பிரசித்தி பெற்ற பதிப்பக உரிமையாளரான வில்லியம் ஃபிரேசன், உத்தரிக்கிற ஆத்துமாக்களால், தனது மனைவி மற்றும் குழந்தையின் உடல் சுகவீனம் எவ்வாறு நலமானது என்பதைப் பற்றி விவரித்துள்ளார்.

வில்லியம் ஃபிரேசனுக்கு, உத்தரிக்கிற ஸ்தலம் பற்றிய விவரம் அச்சடிக்கும் சிறிய வேலை ஒன்று கிடைத்தது. அச்சுப்பிழை சரிபார்க்கும் பணியில் ஈடுபட்டபோது, புத்தகத்தில் விவரிக்கப்பட்டிருந்த கருத்துக்கள் அவரை வெகுவாக ஈர்த்தன.

உத்தரிக்கிற ஆத்மாக்கள் தங்களுக்கு உதவும் நண்பர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிசயிக்கும் வகையில் உதவிகள் செய்யும் விபரத்தை முதல் முறையாக அப்போதுதான் அவர் அறிந்து கொண்டார். இதே நேரத்தில் அவருடைய மகன் மிகவும் நோய்வாய்ப்பட்டு, அனைவராலும் கைவிடப்பட்ட நிலையில் இருந்தார். அப்போது ஃபிரேசனுக்கு உத்தரிக்கிற ஆத்மாக்கள் பற்றி தான் புத்தகத்தில் படித்தது நினைவுக்கு வர, தனது பதிப்பகத்தில் அச்சடித்துக் கொண்டிருந்த, அந்த புத்தகத்தில், 100 பிரதிகள் தனது சொந்த செலவில் அச்சிட்டு மற்றவர்களுக்கு விநியோகம் செய்வதென் பொருத்தனை செய்தார். தனது பொருத்தனையை உறுதி செய்யும் பொருட்டு, ஆலயத்திற்குச் சென்று சத்தியமும் செய்து கொண்டார். அந்த நிமிடம் அவருடைய இருதயத்தில் ஒரு அமைதியும், நம்பிக்கையும் ஏற்பட்டது.

வீட்டிற்குத் திரும்பியபோது, ஒரு துளி தண்ணீர்கூட முழுங்க முடியாத நிலையில் இருந்த அவருடைய அருமை மகன் எழுந்து உட்கார்ந்து தனக்கு உணவு வேண்டும் எனக் கேட்பதைக் கண்டார். அடுத்த நாள் மகன் அபாயக் கட்டத்தை தாண்டியதோடு ஓரிரு நாட்களிலேயே பரிபூரண சுகமும் பெற்றான்.

உத்தரிக்கிற ஸ்தலத்தைப் பற்றி 100 நபர்கள் படித்து அவ்வான்மாக்களுக்காக செப தபம் செய்வதுதான் அவர்களுக்கு உதவி கிடைக்கச் செய்யும் சிறந்த வழி என முடிவு செய்தவராய், ஃபிரேசன் உடனடியாக 100 புத்தகங்களை விநியோகம் செய்தார். உத்தரிக்கிற ஆன்மாக்கள் படும் வேதனையை அறிபவர்கள் கண்டிப்பாக செபிக்காமல் இருக்க முடியாது.

சில காலங்கள் சென்றன. அவருடைய மனைவி மிகவும் உடல் நலம் பாதிக்கப்பட்டு, படுத்த படுக்கையாக இருந்தார். பக்கவாதத்தினால் செயலற்று, மனநலம் குன்றியவராக, மருத்துவர்கள் கைவிடப்பட்ட நிலையில், நாளுக்கு நாள் அவர் நிலைமை மோசமாகிக் கொண்டு இருந்தது.

ஃபிரேசன், உத்தரிக்கிற ஆன்மாக்கள், தனது மகனுக்கு உதவி-யதை நினைவு கூர்ந்தவராக மீண்டும் அதே ஆலயத்திற்குச் சென்று, கைம்மாறாக 200 புத்தகங்களை விநியோகிப்பதாக, தனது மனைவியின் உடல் நலத்திற்காக வேண்டிக் கொண்டார்.

ஆச்சரியமாக சிறிது காலத்திற்குள்ளாகவே, அவரது மனைவியின், மனநிலை சீரடைந்தது. எழுந்து நடமாடவும், பேசவும் ஆரம்பித்து பூரண சுகமும் அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புற்று நோய் குணமானது

டி. ஜோனா தி மெனிசஸ் என்பவர் தனது உடல் நலக்குறைவு சரியானது பற்றி சாட்சியம் தெரிவித்துள்ளார். அந்த அம்மையாரின் காலில் புற்று நோய் கட்டி வளர்ந்து, மிகவும் வலியினால் வேதனைப் பட்டுக் கொண்டிருந்தார். ஒரு சமயம், தான் உத்தரிக்கிற ஆத்மாக்கள் குறித்தும், அவர்களது வல்லமையைக் குறித்தும் கேள்விப்பட்டதை நினைவு கூர்ந்தவராக, அவர்கள் மீது நம்பிக்கை வைத்து, ஒன்பது திருப்பலிகளை அவர்களுக்காக ஒப்புக் கொடுத்தார்கள். மேலும் தனக்கு குணம் கிடைத்தால், அதை வெளியிட்டு, சாட்சியாக இருப்பதாகவும் உறுதி கொண்டார்கள். படிப்படியாக அவர்களது காலின் வீக்கம் குறைந்து, புற்று நோயும் கட்டியும், முற்றிலுமாக மறைந்து பூரண சுகம் பெற்றார்கள்.

## கொள்ளைக் கூட்டத்தினரிடமிருந்து தப்பியது

தீவிர ஊழியக்காரரான ஜூாயிமனேசி என்ற குருவானவர், உத்தரிக்கிற ஸ்தலத்து ஆன்மாக்கள் பேரில் பெரும் பற்றுக் கொண்டிருந்தவர். ஒரு சமயம் ஆபத்தான பயணம் ஒன்று மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருந்த அவர், நம்பிக்கையுடன் உத்தரிக்கிற ஆன்மாக்களிடம், வழியில் ஏற்படக்கூடிய ஆபத்துக்களில் இருந்து தம்மை காத்துக் கொள்ள வேண்டுமென்று விண்ணப்பித்துவிட்டு, பயணம் மேற்கொண்டார். கொள்ளையர்கள் நிறைந்த பாலைவனத்தின் வழியே கடந்து செல்ல வேண்டியிருந்தது. உத்தரிக்கிற ஆன்மாக்களுக்காக செபமாலை செபித்த் வண்ணம் வேக வேகமாக சென்று கொண்டிருந்தபோது, தீடிரென தன்னைச் சுற்றி அரணாக நிறைய பரிசுத்த ஆன்மாக்கள் சூழ்ந்து வருவதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். இதற்கான காரணமும் அவருக்குத் துலங்கியது. பெரும் கொள்ளையர் கூட்டம் அவரைச் சுற்றி வளைத்து கொல்ல முற்பட்டபோது, உடனடியாக பரிசுத்த ஆன்மாக்கள் கொள்ளையரை எதிர்த்து, துரத்திவிட்டு குருவானவருக்கு பாதுகாப்பாக செயல்பட்டுள்ளனர். அவர் பத்திரமான இடத்திற்கு செல்லும்வரை அவருக்கு வழித்துணையாகவும் வந்துவிட்டுச் சென்றனர்.

## உயிர் மீண்ட இளைஞன்

சிர்போன்டைன்னஸ் ஞானசபையின் அதிபர் தமது பங்கில் நடைபெற்ற ஒரு நிகழ்வைத் தெரிவிக்கின்றார்.

ஒரு இளைஞன் டைபாய்ட் காய்ச்சல் முற்றிய நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தபோது. அவனது பெற்றோர். இந்த அதிபரிடம் உத்தரிக்கிற ஆன்மாக்களின் சங்க உறுப்பினர்களிடம் தங்கள மகனுககாக செபிக்கக் கேட்டு கொண்டார்கள். அது ஒரு சனிக்கிழமை. மருத்துவர்கள் எவ்வளவோ போராடியும் பலனில்லாமல் அவ்விளைஞன் சாகும் தறுவாயில் இருந்தான். அனைவரும் செய்வதறியாது கலங்கித் தவித்தனர்.

ஆனால் அதிபரோ, "நான் ஏற்கனவே, உத்தரிக்கிற ஆன்மாக்களின் வல்லமையை அறிந்தும், அவர்கள் உதவியை கண்டும் இருந்ததால், நான் நம்பிக்கையை இழக்கவில்லை. ஏன், நான் மட்டும்தான் நம்பிக்கையோடு கூட இருந்தேன். ஞாயிற்றுக்கிழமை சங்க உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தீவிரமாக மரணத்தறுவாயில் இருந்த நண்பருக்காக, உத்தரிக்கிற ஆன்மாக்களிடம் செபித்தோம். ஆச்சரியம்! திங்கட்கிழமை அபாய கட்டத்தைத் தாண்டி இவ்விளைஞன் குணமடைந்தான்.

## படித்துவிட்டு விழிப்பாயிருப்போம்

ஒரு குருவானவர் இவ்வாறு ஒரு அறிக்கை கொடுத்துள்ளார். எனது நீண்ட கால அனுபவத்தில், சில கத்தோலிக்கர்கள், நமதாண்டவர் கொடுத்த கட்டளையின்படி, ஏழைகளுக்கும், தேவையில் இருப்பவர்களுக்கும், தாராளமாக உதவி செய்வதை ஆச்சரியத்துடன் கவனித்துள்ளேன். சிலர் ஏழைகளைக் கவனித்துக் கொள்கின்றனர். சிலர் நோயுற்றவர்களை பராமரிக்கின்றனர். குஷ்டரோகிகள், காச நோயாளிகள், புற்று நோயாளிகள் மற்றும் மனநலம் குன்றியவர்கள் என இவர்கள் அனைவருக்குமே உதவி செய்யும் நண்பர்கள் இருக்கின்றனர்.

இளவயதினரை சிலர் பராமரிக்கின்றனர். ஒரு பகுதியினர் வயோதி-கர்களை கவனித்துக் கொள்கின்றனர். இது போன்று எளியோர் மற்றும் உதவிகள் தேவைப்படும் அனைத்து தரப்பினருக்குமே, உதவுவதற்கு சிலர் இருக்கின்றார்கள்.

ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், நான் ஒரு ஆணையோ அல்லது ஒரு பெண்ணையோ, தங்களை முழுவதுமாக, அதிக பட்ச உதவி தேவைப்படுபவர்களுக்கு அதாவது உத்தரிக்கிற ஸ்தலத்தில் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் பரிசுத்த ஆன்மாக்களுக்காக, அர்ப்பணித்துக் கொண்டதை பார்த்ததில்லை. எங்காவது ஒருவர், இருவர் இருக்கலாம். ஆனால் எனது நீண்ட கால, பல்வேறு துறை அனுபவத்தில் ஒருவரையும் நான் சந்தித்ததில்லை".


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்த நல்ல குருவானவரின் அறிக்கை**

**மிகவும் சாத்தியமானதே!**

நாங்கள் கேட்டுக் கொள்வது ஒன்றுதான். இதுவரை தங்களை எந்த ஒரு நற்பணியிலும் அர்ப்பணித்துக் கொள்ளாதவர்கள், தங்களை பரிபூரணமாக உத்தரிக்கிற ஆன்மாக்களுக்கு உதவுவதில் ஈடுபடுத்திக் கொள்ளலாம். தங்களால் இயன்ற உதவிகளை செய்வதுடன், மற்றவர்களையும் உதவி செய்வதற்கு ஊக்குவிக்கலாம். உத்தரிக்கிற ஆன்மாக்களுக்கு உதவி செய்வதில் சிறந்த வழியாக, இச்சிறிய புத்தகத்தின் 100 பிரதி-களை மற்றவர்களுக்கு விநியோகிக்கலாம். இதன் மூலம் உத்தரிக்கிற ஆத்மாக்களுக்கு 100 நண்பர்களை உருவாக்குகின்றோம். ஏனென்றால் புத்தகத்தை படித்த எவரும் உதவி செய்ய மறுக்க மாட்டார்கள் அன்றோ?

## உத்தரிப்பு ஸ்தல ஆன்மாக்களுக்கான ஏழு நாட் செபம்

**ஆரம்பச் செபம்**

என் இயேசுவே, நீர் பூங்காவனத்தில் பட்ட துக்க வேதனை-களை முன்னிட்டும், கசையால் அடிக்கப்பட்டதை முன்னிட்டும், தலை-யில் முள்முடியைச் சுமந்த வண்ணமாய் கல்வாரியை நோக்கிச் சென்று கடும் துயரப்பட்டு சிலுவையில் ஆணிகளால் அறையப்பட்டு மரணித்ததை முன்னிட்டும் உத்தரிப்பு ஸ்தல ஆன்மாக்கள் பேரில் தயவாயிரும். விசேடமாய் யாரும் நினையாது கைவிடப்பட்ட நிலையில் தவிக்கும் ஆன்மாக்களை அவர்கள் படும் கொடிய வேதனைகளிலிருந்து மீட்டு உமது முடிவில்லாத பரலோக இன்பத்திற்கு அவர்களையும் கூட்டிச் சேர்த்தருளும். பிதாவோ-டும், சுதனோடும் பரிசுத்த ஆவியோடும் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்றவர் நீரே ஆமென்.

(இப்பொழுது இச்செபங்களைச் சொல்லவும்)

**பரலோக மந்திரம்**

பரலோகத்திலிருக்கின்ற ................ ஆமென்.

**அருள் நிறை மந்திரம்**

அருள் நிறைந்த மரியே ................. ஆமென்.

ஆண்டவரே, நித்திய இளைப்பாற்றியை இவர்களுக்கு அளித்தருளும். முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக. இவர்கள் சமாதனத்தில் இளைப்பாறக்கடவார்களாக. ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறுதிச் செபம்**

இரக்கமுள்ள பிதாவே, எமது வேண்டுதலை தயவாய்க் கேட்டருளும். உமது திருமகனின் உயிர்ப்பிலே எமது விசுவாசம் உயிர்பெறுவதைப் போல, எமது எதிர்பார்ப்பு கட்டியெழுப்பப்படுவதைப் போல இறந்த எம் சகோதர சகோதரிகளுக்கும் பரிசுத்த திரித்துவத்தின் நித்திய பேரின்பம் கிடைப்பதாக ஆமென்.

## அந்தந்த நாட்களுக்குரிய செபங்கள்

**ஞாயிறு**

எல்லாம் வல்ல இறைவா, உமது திருமகனாகிய இயேசுக் கிறிஸ்து நாதர் பூங்காவனத்தில் சிந்திய விலைமதிப்பற்ற திருஇரத்தத்தைப் பார்த்து உத்தரிப்பு ஸ்தலத்திலுள்ள, விசேடமாக யாரும் நினையாத ஆத்துமாக்களை மீட்டு உமது மகிமையில் கொண்டு சேர்த்து சதாகாலமும் உம்மைப் போற்றிப் புகழும் பாக்கியத்தை அருள்வீராக ஆமென்.

**திங்கள்**

எல்லாம் வல்ல இறைவா, உமது திருமகனாகிய இயேசுக் கிறிஸ்து நாதர் பட்ட கசையடிகளால் அவர் சிந்திய விலைமதிப்பற்ற திருஇரத்தத்தின் வல்லமையால் உத்தரிப்பு ஸ்தலத்திலுள்ள, ஆத்துமாக்கள் அனைவருக்காகவும், விசேடமாக உமது இராட்சியம் வந்து சேர சமீபமாக உள்ள ஆத்துமாக்களை மீட்டு உமது மகிமையை புகழ்ந்து பாடும் பாக்கியத்தை அருள்வீராக ஆமென்.

**செவ்வாய்**

எல்லாம் வல்ல இறைவா, உமது திருமகனாகிய இயேசுக் கிறிஸ்து நாதரின் தலையில் சூட்டப்பட்ட முள்முடியின் கொடுரத்தால் சிந்தப்பட்ட அவரது விலைமதிப்பில்லாத திருஇரத்தத்தைப் பார்த்து உத்தரிப்பு ஸ்தலத்திலுள்ள, ஆத்துமாக்கள் அனைவருக்காகவும், விசேடமாக எமது செப உதவி தேவைப்படுபவர்களை மீட்டு உமது மகிமையை புகழ்ந்து பாடும் வரத்தை அருள்வீராக ஆமென்.

**புதன்**

எல்லாம் வல்ல இறைவா, உமது திருக்குமாரன் தன் தோள்மேல் சிலுவையைச் சுமந்து கொண்டு யெருசலேம் நகர் வீதிகளில் சென்றபோது சிந்திய அவரது விலைமதிப்பில்லாத திருக்குருதியைப் பார்த்து உத்தரிப்பு ஸ்தலத்திலுள்ள, ஆத்துமாக்களை விசேடமாக உமது அனுக்கிரகத்தைக் கண்டடைந்த ஆத்துமாக்களை வெகு சீக்கரமாக மீட்டு உம்மைப் புகழ்ந்து பாடும் வரத்தை அவர்களுக்கு அளித்தருளும் ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வியாழன்**

எல்லாம் வல்ல இறைவா, உமது திருமகனாகிய இயேசுக் கிறிஸ்து தாம் பாடுபட முந்தின இரவு தமது இரத்தத்தையும், சரீரத்தையும் தமது அப்போஸ்தலர்களுக்கும், கத்தோலிக்க திருச்சபைக்கும் அளித்தாரே அந்த மகிமையைப் பார்த்து உத்தரிப்பு ஸ்தலத்திலுள்ள, ஆத்துமாக்களை விசேடமாக இம்மறைபொருளான திருப்பலிக்கு தங்களை அர்ப்பணித்த ஆத்துமாக்களை மீட்டு பரம பரிசுத்த திரித்துவமான உமக்கும், உமது மகனுக்கும், பரிசுத்த ஆவிக்கும் நன்றிப் புகழ் பாட அவர்களுக்கு வரம் அளித்தருளும் ஆமென்.

**வெள்ளி**

எல்லாம் வல்ல இறைவா, உமது திருமகனாகிய இயேசுக் கிறிஸ்து நாதர் அன்று திருச்சிலுவையில் அறையுண்டு அவரது கைகள் மற்றும் கால்களின் திருக்காயங்களிலிருந்து வழிந்தோடிய விலைமதிப்பற்ற திருஇரத்தத்தைப் பார்த்து உத்தரிப்பு ஸ்தலத்திலுள்ள, ஆத்துமாக்களை விசேடமாக நான் யாருக்காக அதிகமாய்ச் செபிக்க வேண்டுமோ அவ்வான்மாக்களை மீட்டு அவர்களை உமது மகிமையை புகழ்ந்து பாடச் செய்தருளும் ஆமென்.

**சனி**

எல்லாம் வல்ல இறைவா, உமது திருமகனாகிய இயேசுக் கிறிஸ்துவின் திருவிலாவிலிருந்து பாய்தோடிய விலைமதிப்பற்ற திருஇரத்தத்தையும் அந்நேரம் அங்கிருந்த தேவமாதாவின் வியாகுலத்தையும் பார்த்து உத்தரிப்பு ஸ்தலத்திலுள்ள, ஆத்துமாக்களை விசேடமாக அவர்களில் தேவதாயார் மட்டில் பக்தியுள்ள ஆன்மாக்களை மீட்டு உம் புகழ் பாடச் செய்தருளும் ஆமென்.

## உதவி தேவைப்படும் ஆன்மாக்களுக்காக செய்யும் சில செபங்கள்

**செக்கரியாவின் பாடல் (பெனடிக்ருஸ்)** (லூக் 1:68-79)

68 : "இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரைப் போற்றுவோம். ஏனெனில் அவர்தம் மக்களைத் தேடி வந்து விடுவித்தருளினார்.

69 - 70 : தம் தூய இறைவாக்கினர் வாயினால் தொடக்க முதல் அவர் மொழிந்தபடியே அவர் தம் ஊழியராகிய தாவீதின் குடும்பத்தில் வல்லமை உடைய மீட்பர் ஒருவர் நமக்காகத் தோன்றச் செய்தார்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71 : நம் பகைவரிடமிருந்தும் நம்மை வெறுப்போர் அனைவரின் பிடியிலிருந்தும் நம்மை மீட்பார்.

72 - 73 : அவர் நம் மூதாதையருக்கு இரக்கம் காட்டி, தமது தூய உடன்படிக்கையையும், நம் தந்தையாகிய ஆபிரகாமுக்கு அவர் இட்ட ஆணையையும் நிறைவேற்ற நினைவு கூர்ந்தார்.

74 - 75 : இவ்வாறு நாம் பகைவரின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுத் தூய்மையோடும், தாழ்மையோடும் வாழ்நாளெல்லாம் அச்சமின்றி அவர் திருமுன் பணி செய்யுமாறு வழிவகுத்தார்.

76 - 77 : குழந்தாய், நீ உன்னத கடவுளின் இறைவாக்கினர் எனப்படுவாய்; ஏனெனில் பாவ மன்னிப்பால் வரும் மீட்பை அவர்தம் மக்களுக்கு அறிவித்து ஆண்டவருக்கான வழியைச் செம்மைப்படுத்த அவர் முன்னே செல்வாய்.

78 - 79 : இருளிலும் இறப்பின் பிடியிலும் இருப்போருக்கு ஒளி தரவும், நம்முடைய கால்களை அமைதி வழியில் நடக்கச் செய்யவும் நம் கடவுளின் பரிவுள்ளத்தாலும் இரக்கத்தாலும் விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடி வருகின்றது".

**செபிப்போமாக**

எல்லாம் வல்ல இறைவா, இவ்வுலகை விட்டுச் சென்ற உமது ஊழியர்களை இரக்கமுடன் கண்ணோக்கிப் பாரும். உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல் பூலோகத்திலும் செய்யப்படுவதாக என்று இவ்வுலகில் செபித்த உமது விசுவாசிகளுடைய கூட்டத்தில் இருந்தவர்களை அவர்களது பிழைகளுக்காக தண்டியாது உமது இரக்கத்தில் அவர்களும் தூதர் அணிகளின் வரிசையில் வந்து சேர துணை புரிந்தருளும். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம் ஆமென்.

## என்னை மீட்டருளும்

அப்பயங்கரமான தினத்தில் முடிவில்லாத மரணத்திலிருந்து என்னை மீட்டருளும் ஆண்டவரே அப்போது வானமும் பூமியும் அசைவுறும் அப்போது நீரும் இவ்வுலகை நெருப்பினால் தீர்ப்பிட வருவீர்.

பயமும், அச்சமும் என்னைச் சூழ்ந்து வரும்போது நானும் மிகுதியாக பயத்தில் மூழ்கிடுவேன். ஏனெனில் உமது தீர்ப்பும் தண்டனையும் நெருங்கி வரும். வானமும் பூமியும் அதிரும்போது, அந்நாளில், அத்தண்டனையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளில், வேதனையின். பயங்கரத்தின். மிகுந்த கசப்பின் நாளில் நீர் இவ்வுலகை நெருப்பால தீப்பிட வரும்போது என்னை மீட்டருளும். நித்திய இளைப்பாற்றியை ஆண்டவரே இவர்களுக்கு அளித்திடுவீர். முடிவில்லா ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக. ஆமென்.

## உத்தரிப்பு ஸ்தலத்திலுள்ள எளிய ஆன்மாக்களுக்கான தனிப்பட்ட பிரார்த்தனை

**★ இயேசு மரி சூசை இவ்வான்மாக்கள் மீது இரங்கிடுவீர்**

**தலைவர் :**

எல்லாம் வல்ல இறைவா, அன்பினதும் நன்மைத்தனத்தினதும் தந்தையே உத்தரிப்பு ஸ்தலத்தில் துன்புறும் இவ்வான்மாக்கள் மீது இரக்கம் வைத்து அவர்களுக்கு உதவிடும்.

என்னுடைய அன்புப் பெற்றோர் மற்றும் பரம்பரையினர், *...
என்னுடைய சகோதர சகோதரிகள் மற்றும் உற்றார் உறவினர்கள், *...
எனது ஆன்மீக மற்றும் உலகியல் உதவியாளர்கள், *...
எனது நண்பிகள் மற்றும் தெரிந்தவர்கள், *...
என்னைப் புண்படுத்தியவர்கள் மற்றும் என்னால் புண்படுத்தப்பட்டவர்கள், *...
உம்மால் நேசிக்கப்படுபவர்கள், *...
வெகுவிரைவில் விடுதலையை எதிர்பார்த்திருப்பவர்கள், *...
மிகுதியான துன்ப வேதனைகளை அனுபவிப்பவர்கள், *...
விடுதலைக்காக நீண்ட காலம் காத்திருக்க வேண்டியவர்கள், *...
யாரும் நினையாதவர்கள், *...
திருச்சபையின் சேவையில் தங்களை அர்ப்பணித்தவர்கள், *...
தற்போது ஏழ்மையிலுள்ள செல்வர்கள், *...
தற்போது அடிமைகளாயுள்ள அதிகாரம் படைத்தவர்கள், *...
அநீதியின் முன் கண்மூடிக் கொண்டிருந்து தற்போது தம் வேதனையில் விழி பிதிங்கிக் கொண்டிருப்பவர்கள், *...
சோம்பேறிகளாய்த் திரிந்து தற்போது துடிதுடிப்பவர்கள், *...
விண்ணக செல்வத்தை தேடாத ஏழைகள், *...
குறுகிய காலத்தை செபத்தில் செலவிட்டவர்கள், *...
நற்காரியங்களை செய்ய மறுத்தவர்கள், *...
திருவருட்சாதனங்களை பெற அசட்டையாய் இருந்தவர்கள், *...
பாவிகளாய் தொடர்ந்திருந்து இறுதி நேரத்தில் மனம்மாற எத்தனித்தவர்கள், *...
பிள்ளைகளை கரிசனையோடு வளர்க்காதவர்கள், *...
தங்களுக்கு கீழ் உள்ளவர்களின் மீட்புக்காக உழைக்கத் தவறிய தலைவர்கள், *...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகியல் சிற்றின்பங்களை மட்டுமே விரும்பித் தேடியவர்கள். *...
உலக கவலையால் இறை சேவைக்கு தம்மை அாபபணிககாதவர்கள்,*...
பரலோக பயணத்தைப் பற்றிய சிந்தனையே இல்லாது இருந்தவர்கள், *...
உலகில் பொறுப்புக்கள் மிகுதியாய் இருந்தவர்கள், *...
பாப்பரசர்கள், அரசர்கள் மற்றும் இளவரசர்கள், *...
ஆயர்கள் மற்றும் குருக்கள், *...
ஆன்மீக வழிகாட்டிகள் மற்றும் ஆசிரியர்கள், *...
யுத்த காலங்களில் மரித்தவர்கள், *...
திருச்சபைக்கு புறம்பே மரித்தவர்கள், *...
கிறிஸ்துவில் நம்பிக்கை இல்லாதவர்கள், *...
உமது நீதி இருக்கையின் முன் வருகையில் எனது எளிய ஆன்மாவை, *...
மரித்த விசுவாசிகள் அனைவரும் சமாதானத்தில் இளைப்பாறக்கடவார்களாக ஆமென்.

## ஆன்மீக செல்வமான ஆசீநீர்

ஆசீர்வதிக்கப்பட்ட நீர் பலம்வாய்ந்த ஆன்மீக செல்வமாதலால் சாத்தான் அதை எதிர்க்கிறது.

தண்ணீர் தூய்மையின் அடையாளம். திருவிவிலியத்திலும் அதன் பயன்பாட்டைக் காணலாம். ஆகவே, திருச்சபையும் அதைப் பாவிக்கின்றது. ஆசீநீர் ஆசீரை அளித்து உலகியல் தண்டனையையும் தீர்க்கிறது.

ஆசீநீரால் எம்மை சிலுவை அடையாளம் வரைந்து அர்ச்சிப்பது மிகுந்த பயனளிக்கும். ஆசீநீர் எல்லா வீடுகளிலும் இருக்க வேண்டிய செல்வமாகும். வீடுகளிலும், தொழிலகங்களிலும் ஆசீநீரைத் தெளித்து செபிக்க வேண்டும்.

ஆசீநீரை உத்தரிப்பு ஸ்தல ஆன்மாக்கள் விரும்பித் தேடுகின்றன. ஏனெனில் அதன் அகோர நெருப்பை தணித்துக் கொள்ள அது உதவி புரிகிறது. ஆகவே ஆசீநீரைத் தெளித்து இவ்வாறு செபிக்கவும்.

“இறைவா, உமது இரக்கத்தில் இவ்வாசீநீர்த் துளிகளை பல்கிப் பெருகச் செய்தருளும். உத்தரிப்பு ஸ்தல ஆன்மாக்கள் மேல் இவை தெளிக்கப்பட்டு அவர்கள் உத்தரிப்பு ஸ்தல வேதனையிலிருந்து மீட்கப்படுவார்களாக ஆமென்”.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறிய செபத்தின் பெரிய வல்லமை

'இயேசுவே, மரியன்னையயே நான் உங்களை அன்பு செய்கின்றேன், ஆன்மாக்களை மீட்டருளும்' எனும் செபத்தை அடிக்கடி செபிப்பதன் ஊடாக பல ஆன்மாக்களை உத்தரிப்பு ஸ்தலத்திலிருந்து மீட்டுக் கொள்ள முடியும் என்பதை உணர்ந்து இச்செபத்தை செபிப்போம்.

## பிறக்காதவர்களுக்கான (கருக்கலைப்பு செய்யப்பட்டவர்களுக்கான)
## ஆன்மீகத் திருமுழுக்கு

(விசுவாசப்பிரமாணத்தைச் சொல்லவும்)

இன்று இறந்த நிலையில் பிறந்த அனைவரும் இயேசுக் கிறிஸ்து நாதர், புனித மரியாள், புனித சூசையப்பர் மற்றும் புனிதர்கள் அனைவா-ின் நாமத்தினால் முடிவில்லாத வாழ்வை அடைவார்களாக (பெயர்) (பலர்) நான் உனக்கு (உங்களுக்கு) பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயரால் திருமுழுக்கு அளிக்கின்றேன் (நான்கு மூலைகளுக்கும் ஆசீநீர் தெளிக்கவும்)

(1 பர. 1 அருள். 1 திரி)

## வீரச்செயல்

உத்தரிப்பு ஸ்தலத்திலுள்ள ஆன்மாக்களை மீட்டெடுப்பதே அன்பின் வீரச்செயலாகும். எமது செப தப நற்செயற் பலன்களை எல்லாம் உத்தரிப்பு ஸ்தல ஆன்மாக்களின் விடுதலைக்காக அர்ப்பணித்தல். அன்பின் வீரச்செயலை பாப்பரசர்களான 13ம் பெனடிக் (1728), 6ம் பயஸ் (1788), 11ம் பயஸ் (1852), 13ம் லியோ (1885), போன்றோர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

## ஆயிரம் ஆன்மாக்களை மீட்கக் கூடிய
## புனித பெரிய கேட்ரூட் அம்மையாரின் செபம்.

"முதலும் முடிவுமற்ற இறைவா, நான் உமது திருமைந்தனின் மிகவும் விலைமதிப்பற்ற திருஇரத்தத்தை இன்று உலகம் பூராகவும் நடைபெற்ற திருப்பலிகளோடு சேர்த்து உத்தரிப்பு ஸ்தல தூய ஆன்மாக்களுக்காகவும், பாவிகள் அனைவருக்காகவும், திருச்சபையில் உள்ளவர்களுக்காகவும், எனது வீட்டிலும், குடும்பத்திலும் உள்ளவர்களுக்காகவும் ஒப்புக் கொடுக்கின்றேன்" ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உத்தரிக்கிற ஆன்மாக்களின் புகழ்மாலை

சுவாமி கிருபையாயிரும்
கிறிஸ்துவே கிருபையாயிரும்
சுவாமி கிருபையாயிரும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் தயவாக கேட்டருளும்
பரலோகத்திலிருக்கிற பிதாவாகிய சர்வேசுரா
**- எங்களை தயைபண்ணி இரட்சியும் சுவாமி**
உலகத்தை மீட்டு இரட்சித்த சுதனாகிய சர்வேசுரா
**- எங்களை தயைபண்ணி இரட்சியும் சுவாமி**
தூய ஆவியாகிய சர்வேசுரா
**- எங்களை தயைபண்ணி இரட்சியும் சுவாமி**
புனித தமத்திருத்துவமாயிருக்கிற ஏக சர்வேசுரா
**- எங்களை தயைபண்ணி இரட்சியும் சுவாமி**
புனித மரியாயே...
**- மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக் கொள்ளும்.**
இறைவனுடைய புனித மரியே *...
கன்னியர்களில் உத்தம கன்னிகையே ...
புனித மிக்கேலே ...
தூதரும் அதிதூதருமாகிய சகல சம்மனசுக்களே **...
நவ விலாச சபையாயிருக்கிற சகல சம்மனசுக்களே ...
புனித ஸ்தாபக அருளப்பரே *...
புனித சூசையப்பரே ...
பிதாப்பிதாக்களும் தீர்க்கத்தரிசிகளுமாகிய புனிதர்களே **...
புனித இராயப்பரே *...
புனித சின்னப்பரே ...
புனித அருளப்பரே ...
அப்போஸ்தலரும் சுவிசேஷகருமாகிய சகல புனிதர்களே **...
புனித முடியப்பரே *...
புனித லவுரேஞ்சியாரே ...
வேதசாட்சிகளான சகல புனிதர்களே **...
புனித கிரகோரியாரே *...
புனித அமிர்தநாதரே ...
புனித அகுஸ்தீனுவே ...
புனித இரோணிமுசே *...
மேற்றிராணிமார்களும் ஸ்துதியர்களுமாகிய சகல புனிதர்களே **...
வேத வித்தியாபாரகரான சகல புனிதர்களே **...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருக்களும் ஆசிரியர்களுமாகிய சகல புனிதர்களே ...
சந்நியாசிகளும் தபோதனாகளுமாகிய சகல புனிதர்களே ...
புனித மரிய மகதலேனாளே *...
புனித கத்தரீனாளே ...
புனித பார்பரம்மாளே ...
கன்னியாஸ்திரிகளும் விதவைகளுமாகிய சகல புனிதர்களே **...
ஆண்டவருடைய திருவடிகளான ஸ்திரீபூமான்களாகிய சகல புனிதர்களே **...

* மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக் கொள்ளும்
** மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்

தயாபரராயிருந்து,
- அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளும் சுவாமி
தயாபரராயிருந்து,
- எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும் சுவாமி
சகல பொல்லாப்புகளிலே நின்று,
- அவர்களை இரட்சித்துக் கொள்ளும் சுவாமி
உமது கோபத்திலே நின்று ***...
உமது நீதி அகோரத்திலே நின்று ...
பசாசின் வல்லமையிலே நின்று ...
கொடூர வியாகுலத்திலே நின்று ...
கொடிய ஆக்கினையிலே நின்று ...
மரணத்தின் பயங்கரமான இருளிலே நின்று ...
அக்கினிச் சுவாலையிலே நின்று ...
துயரமான அழுகையிலே நின்று ...
உத்தரிக்கிற ஸ்தலத்து சிறைச்சாலையிலே நின்று ...
தேவரீருடைய திருமனிதவதாரத்தைப் பார்த்து ...
தேவரீருடைய மாசில்லாத உற்பவத்தையும் பிறப்பையும் பார்த்து ...
தேவரீருடைய மதுரமான நாமத்தைப் பார்த்து ...
தேவரீருடைய பாலத்துவத்தைப் பார்த்து ...
தேவரீருடைய ஞானத்தையும் உபவாசத்தையும் பார்த்து ...
தேவரீருடைய மிகுந்த தாழ்ச்சியைப் பார்த்து ...
தேவரீருடைய சுறுசுறுப்பான கீழ்ப்படிதலைப் பார்த்து ...
தேவரீருடைய கிருபையின் மிகுதியையும் அளவில்லாத சினேகத்தையும் பார்த்து ...
தேவரீருடைய கொடூர உபத்திரவங்களையும் நிர்ப்பந்தங்களையும் பார்த்து ...
தேவரீருடைய இரத்த வேர்வையைப் பார்த்து ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவரீர் கட்டுண்ட கட்டுகளைப் பார்த்து ...
தேவரீர் பட்ட அடிகளைப் பார்த்து ...
தேவரீருடைய திருமுள்முடியைப் பார்த்து ...
தேவரீருடைய திருச்சிலுவையைப் பார்த்து ...
தேவரீருடைய கொடூரமான மரணத்தைப் பார்த்து ...
தேவரீருடைய ஐந்து திருக்காயங்களைப் பார்த்து ...
எங்கள் மரணத்தை ஜெயித்தெழுந்த தேவரீருடைய மரணத்தைப் பார்த்து ...
தேவரீருடைய விலைமதியாத திரு இரத்தத்தைப் பார்த்து ...
தேவரீருடைய மகிமையான உத்தானத்தைப் பார்த்து ...
தேவரீருடைய அதிசயமான ஆரோகணத்தைப் பார்த்து ...
தேற்றரவு பண்ணுகிறவராகிய தூய ஆவியின் ஆகமனத்தைப் பார்த்து ...
நடுத்தீர்க்கிற நாளிலே ...

**★★★ அவர்களை இரட்சித்துக் கொள்ளும் சுவாமி**

பாவிகளாயிருக்கிற நாங்கள் தேவரீரை மன்றாடுகிறோம்
**- எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும் சுவாமி**

பாவியாயிருந்த மதலேன் அம்மாளுக்குப் பாவ மன்னிப்பு தந்தவரும் நல்ல கள்வனின் மன்றாட்டைக் கேட்டவருமாகிய தேவரீரை மன்றாடுகிறோம் **...

மரணத்தின் திறவுகோலையும் நரகத்தின் திறவுகோலையும் கைக்கொண்டிருக்கிற தேவரீரை மன்றாடுகிறோம் ...

இரட்சண்ணியத்துக்கு உரியவர்களை இலவசமாய் இரட்சிக்கிற தேவரீரை மன்றாடுகிறோம் ...

எங்கள் சகோதரர், உறவினர், நண்பர்களுடைய ஆத்துமங்களை உத்தரிக்கிற ஸ்தலத்திலே நின்று இரட்சித்தருள வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம் ...

பூலோகத்தில் யாவரும் நினையாத சகல ஆத்துமாக்களுக்கும் தயவுசெய்ய வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம் ...

கிறிஸ்துநாதரிடத்தில் இளைப்பாறுகிற சகலருக்கும் குளிர்ச்சியும் பிரகாசமும் சமாதானமுள்ள இடத்தை கட்டளையிட்டருள தேவரீரை மன்றாடுகிறோம் ...

பாவதோஷத்தால் அவர்களுக்கு உண்டாகிற ஆக்கினையைக் குறைக்க வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம் ...

அவர்கள் துயரத்தை சந்தோஷமாக மாற்றியருள தேவரீரை மன்றாடுகிறோம் ...

அவர்களுடைய ஆசை நிறைவேற தயைபுரிய வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம் ...

அவர்கள் உம்மைப் புகழ்ந்து ஸ்துதி பலியை உமக்குச் செலுத்தும்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தருள தேவரீரை மன்றாடுகிறோம் ...
உம்முடைய புனிதர்களின் கூட்டத்தில் அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம் ...
இறைவனின் மகனே, தேவரீரை மன்றாடுகிறோம் ...
கிருபையின் ஊரணியே, தேவரீரை மன்றாடுகிறோம் ...

உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே ... (3முறை)

**- அவர்களுக்கு இளைப்பாற்றியைத் தாந்தருளும்**

**- அவர்களுக்கு இளைப்பாற்றியைத் தாந்தருளும்**

**- அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியைத் தாந்தருளும்**

நரக வாசலிலே நின்று,

**- அவர்களுடைய ஆத்துமாக்களை மீட்டு இரட்சித்தருளும்.**

சமாதானத்தில் இளைப்பாறுவார்களாக!

**- அப்படியே ஆகக்கடவது.**

**முதல்:** சுவாமி எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.
**துணை:** எங்கள் அபயச் சத்தம் தேவரீருடைய சந்ததி மட்டும் வரக்கடவது.

**செபிப்போமாக.**

சகல விசுவாசிகளுடைய சிருஷ்டிகரும் இரட்சகருமாகிய இறைவா, மரித்த உமது அடியார்களுக்காகச் செய்யப்படுகிற பக்தியுள்ள மன்றாட்டுக்களை அங்கீகரித்து, அவர்கள் மிகுந்த ஆவலோடு கேட்கிற பாவமன்னிப்பைக் கிருபை செய்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம். சதாகாலமும் சீவியரான இறைவா! இந்த மன்றாட்டைத் தயவோடு கேட்டருளும் சுவாமி.

நித்திய பிதாவே! பெற்றோர், உற்றார், நண்பர், உபகாரிகள் முதலியவர்களைத் தக்கவிதமாய் நேசித்து அவர்களுக்கு வேண்டிய நன்மைசெய்ய கற்பித்தருளினீரே. ஆகையால் எங்களைப் பெற்று அன்போடு வளர்த்து ஆதரித்தவர்களும் பற்பல உபகாரம் எங்களுக்குச் செய்தவர்களும் எங்கள் உறவினர், நண்பர், முதலானவர்களும் வேதனை நீங்கி நித்தியகாலம் உம்மை சந்தோஷமாய் தரிசித்துக் கொண்டிருக்கக் தேவரீர் கிருபை செய்தருள வேண்டுமென்று மன்றாடுகின்றோம்

**முதல்:** மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளுவோமாக.
**துணை:** நித்திய இளைப்பாற்றியை அவர்களுக்குத் தந்தருளும் சுவாமி முடிவில்லாத பிரகாசமும் அவர்களுக்குப் பிராகாசிக்கக்கடவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிராத்தனை**

நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருக்காயங்களைக் குறித்து செபமாலை அல்லது இரக்கத்தின் செபமாலை (சாதாரண செபமாலையில்) செபிக்கலாம்.

**பெரிய மணியில்**

என்றும் வாழும் தந்தாய்! எங்கள் ஆன்ம காயங்களைக் குணமாக்க எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருக்காயங்களை உமக்கு ஒப்புக் கொடுக்கின்றேன்.

**சிறிய மணியில்**

என் இயேசுவே! உமது திருக்காயங்களின் பேறு பலன்கள் வழியாக என்னை (ஆத்மாக்களை) மன்னித்து எனக்கு (எங்களுக்கு) இரக்கம் காட்டியருளும்.

இந்த இரண்டு செபங்களும் பிரான்சு தேசத்தில், பரிசுத்தமான மரணமடைந்த சாம்பெரி நகர திருசந்திப்பு சபையை சார்ந்த பொதுநிலை சகோதரியான மேரி மார்த்தா சேம்போன் என்பவருக்கு 1907ல் மார்ச் மாதம் 21ம் திகதி நமதாண்டவர் தாமே கற்றுக் கொடுத்தது. மேலும் அச்சகோதரியை, இடைவிடாமல் ஆண்டவரது திருக்காயங்களை ஆராதித்து, மன்றாடுவதுடன் உலக மாந்தர் அனைவரது இருதயத்திலும், இந்த பக்தியை பரப்பவும் பணித்தார்.

**ஆத்மாக்களின் நலனுக்காக சகோதரி மேரி மார்த்தா சேம்போனுக்கு, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தெரிவித்த வார்த்தைகளை அவ்வாறே பின்வருமாறு தெரிவிக்கின்றோம்.**

"பாவிகளுக்குப் பரிகாரமாக என்னுடைய திருக்காயங்களை ஒப்புக் கொடுக்கும்போது, உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்மாக்களுக்காகவும் அவ்வாறே ஒப்புக் கொடுக்க ஒரு போதும் மறக்காதே, ஏனென்றால் வெகு சிலரே அவர்களுக்கு உதவி செய்ய நினைக்கின்றனர். திருக்காயங்களானது, உத்தரிக்கிற ஆத்மாக்களுக்கு, பொக்கிஷத்திலும் பொக்கிஷமாகும்". "வாழும் காலத்தில் எவர் ஒருவர், நமதாண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் திருக்காயங்களை தியானித்து, மகிமை செய்து, பரலோக தந்தையிடம் உத்தரிக்கிற ஆத்மாக்களுக்காக ஒப்புக் கொடுக்கின்றார்களோ அவர்களது மரணத்தின்போது, வானதூதர் சூழ தேவதாய் தாமே வந்து அழைத்துச் செல்வார். நமது திருச்சிலுவை ஆண்டவர் அதி மகிமையுடன் வந்து அன்புடன் அந்த ஆன்மாவை வரவேற்று ஜீவ கிரீடத்தை சூட்டுவார்.

ஒரு பரிசுத்த அல்லது உயிரோடு இருக்கும் ஆத்மாவிற்கு நாம் அளிக்கும் மிக உன்னத வெகுமதி, அவர்களுக்காக நாம் ஒப்புக் கொடுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பலிதான். எனவே சமீபத்தில் மரித்த அடுத்து தேவையிலிருக்கும் ஓர் ஆத்மாவிற்காக திருப்பலி ஒப்புக் கொடுபபதை எபபோதும் மறக்க கூடாது. அடுத்ததாக அதிக பலன்கள் பெற்றுக் கொடுப்பது செபமாலை செபிப்பதன் மூலமும், சிலுவைப் பாதையை பக்தியுடன் தியானித்து செபிப்பது மூலமும் தான்.

**நித்திய இளைப்பாற்றியை இவர்களுக்கு அளித்தருளும் ஆண்டவரே, முடிவில்லாத ஒளி இவர்கள் மீது ஒளிர்வதாக. இவர்களின் ஆன்மாக்கள் சமாதானத்தில் இளைப்பாறக் கடவன ஆமென்.**

## உத்தரிக்கின்ற ஸ்தலத்திலுள்ள ஆன்மாக்களுக்காக செபம்

திவ்விய இயேசுவே! உத்தரிக்கின்ற ஸ்தலத்திலுள்ள ஆன்மாக்கள் பேரில் இரக்கமாயிரும். தாவீது அரசனின் குலத்திலுதித்த இறைவனின் புத்திரனாகிய இயேசுவே! சிலுவைப் பாரத்தால் அதிகரித்த உமது திருக்காயங்களின் கொடிய வேதனைகளைப் பார்த்து உத்தரிக்கின்ற ஆன்மாக்களின் பேரில் இரக்கமாயிரும் சுவாமி! தேவரீர் அன்று சிலுவைப் பீடத்தில் பலியாகும் நேரம் பச்சாத்தாப கள்வனுக்கு கிருபை புரிந்ததுபோல இந்த ஆன்மாக்களின் பேரில் இரக்கமாயிருந்து அவர்களை உமது பிரத்தியட்ச தரிசனையின் பாக்கியத்தில் சேர்த்தருளும். அங்கே சகல புனிதர்களோடும் சம்மனசுக்களோடும் அவர்கள் சதாகாலமும் தேவரீரை வாழ்த்தி ஸ்துதித்துக் கொண்டிருப்பார்கள் - ஆமென்.

உன்னதத்தில் வீற்றிருக்கும் பிதாவே! உத்தரிக்கின்ற ஸ்தலத்தில் வேதனைப்படும் ஆன்மாக்களுக்காக திவ்விய இயேசுக் கிறிஸ்துவின் விலை மதியாத திரு இரத்தத்தை உமக்கு ஒப்புக் கொடுக்கின்றேன் சுவாமி! பரிசுத்தரே, சர்வ வல்லப பரிசுத்தரே, அட்சமான பரிசுத்தரே, சுவாமி! எங்கள் மேல் இரக்கமாயிரும். பாவிகளுக்குப் பொறுத்தலை தந்தருளும். மரித்த சகல விசுவாசிகளுக்கும் நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிட்டருளும். ஆமென்.

## உத்தரிக்கின்ற ஸ்தலத்திலுள்ள ஆன்மாக்களுக்காக மாதாவிடம் காணிக்கை செபம்

மிகவும் பரிசுத்த கன்னிமரியே! உத்தரிக்கின்ற ஸ்தலத்து ஆன்மாக்கள் பேரில் இரக்கமிகுந்த தேற்றரவு மாதாவே! அடியேன் இதோ உமது திருப்பாதத்தண்டையில் சாஷ்டாங்கமாய் விழுந்து மன்றாடி ஒப்புக் கொடுக்கும் காணிக்கை என்னவென்றால், என் அனுதினக் கிருபையினாலே நான் அடையக் கூடிய பூரண பேறுபலன்களையும் என் மரணத்திற்குப்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்காக ஒப்புக் கொடுக்கப்படும் செபத்தின் பலன்களையும் தேவரீருக்கு ஒப்புக் கொடுக்கின்றேன். மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்களின் நன்மைக்காகத் தேவரீர் சித்தம்போல் அவைகளைப் பிரயோகிக்க கிருபை புரிந்தருளும். தற்காலத்திலும், பிற்காலத்திலும் நித்தியத்திலும் எனக்கு வரக்கூடிய நன்மைப் பலன்களையெல்லாம் சுயநல நாட்டமின்றி தாயின் நேசமுள்ள உமது பராமரிப்பிலேயே முழுவதும் ஒப்படைத்து விடுகின்றேன். உமது திருமகனாகிய ஆண்டவர் தமது கிருபை இரக்கத்துக்கு அல்ல நீதிக்கேற்றபடி உமது திருக்கரங்களின் வழியாக அடியேனுக்கு நியமித்தனுப்பும், நன்மை, தீமைகளையெல்லாம் மனப்பூர்வமான அமைதலோடு இப்போதே கையேற்றுக் கொள்கின்றேன் - ஆமென்.

## உத்தரிக்கின்ற ஸ்தலத்துக்கு போகாமல் மோட்சம் செல்ல உதவக்கூடிய பரிகார ஒப்புக் கொடுத்தல் செபம்

நித்திய பிதாவே! இன்றைய தினத்திலும் என் சீவிய காலம் முழுவதும் நான் கட்டிக் கொண்ட சகல பாவங்களுக்குப் பரிகாரமாக, இயேசு மரியின் இருதயங்களை அவர்களின் நேசத்தோடும் சகல பாடுக-ளோடும் உமக்கு ஒப்புக் கொடுக்கின்றேன்.

நித்திய பிதாவே! இன்றைய தினத்திலும் என் சீவிய காலம் முழுவதும் நான் குற்றங்குறைகளோடு செய்த நன்மையை சுத்திகரிப்பதற்காக இயேசு மரியின் இருதயங்களை அவர்களின் நேசத்தோடும் சகல பாடுகளோடும் உமக்கு ஒப்புக் கொடுக்கின்றேன்.

நித்திய பிதாவே! இன்றைய தினத்திலும் என் சீவிய காலம் முழுவதும் நான் செய்யத் தவறிய நன்மைகளுக்கு ஈடாக இயேசு மரியின் இருதயங்களை அவர்களின் நேசத்தோடும் சகல பாடுகளோடும் உமக்கு ஒப்புக் கொடுக்கின்றேன் - ஆமென்.

(குறிப்பு : இந்த செபத்தைத் தினமும் பக்தியுடன் சொல்லிவந்த ஒரு சகோதரி அதனிமித்தம் தான் உத்தரிக்கிற ஸ்தலம் போகாமல் மோட்சம் சென்றதாக தன் உடன் சகோதரிக்கு காட்சியில் தோன்றிச் சொல்லியுள்ளதாக ஒரு வரலாறு உள்ளது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரித்தோருக்கான நாளாந்த சிந்தனைகளும் செபங்களும்.

**மரித்த எமது உற்றார் உடன் பிறந்தாரின் நினைவாக.....**

நாங்கள் அன்பு செய்யும்போது, அவர்களை நினைவு கூர்கின்றோம். நினைவு கூருவதோடு மட்டும் நின்றுவிடாது அவர்களுக்காக அன்புச் செயல்களிலும் ஈடுபடுகின்றோம். எமது துன்ப துயரம் விசுவாசத்தோடு இணையும்போது அதுவே அவ்வான்மாவுக்கு ஆறுதலையும், ஆனந்தத்தையும் கொடுப்பதாக மாறுகின்றது. வாழ்நாளில் அன்பு செய்தவரின் செயல்கள், சொற்கள், விட்டுச்சென்றவரைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் நாம் அவர்களோடு கொண்டிருந்த முன்னைய உறவை திரும்பி வாழுவது போல் ஆகும்.

இயேசுவின் தெய்வீக இருதயமே, பாவிகளை மனமாற்றும், மரணத்தறுவாயில் இருப்பவர்களை மீட்டருளும், உத்தரிப்பு ஸ்தலத்தில் இருக்கும் ஆன்மாக்களை விடுவித்தருளும்.

**செபம்**

எல்லாம் வல்ல இறைவா, நான் உம்மை இரஞ்சிக் கேட்கின்றேன், உமது மகன் இயேசுவின் விலாவிலிருந்து பீறிட்டோடிய இரத்தத்தின் வழியாகவும், அவரது பரிசுத்த மாதாவின் துயரங்களின் பொருட்டும், உத்தரிப்பு ஸ்தலத்திலுள்ள ஆன்மாக்களை விடுவித்தருளும். விசேடமாக ஆண்டவர் இயேசுவின் இருதயத்தையும், பரலோக இராக்கினியாகிய மரியாவையும் வணங்கி வந்த ஆன்மாக்கள் தமது மாட்சிமையை வெகு சீக்கிரமே அடைந்து உம்மை சதாகாலமும் போற்றி புகழ்வனவாக. ஆமென்.

(பர. அருள். திரி)

"பரிசுத்த ஆவியானவரே ஒளியின் ஆண்டவரே என்னை வழிநடத்தும், எனக்கு நிலையான வாழ்வின் இரகசியத்தைக் கற்றுத்தாரும்".

ஒரு விடயம் மிகவும் முக்கியமானது. அது தான் நிலையான மீட்பு. இந்த வகையில் ஒரு விடயத்திற்கு மட்டும் தான் நாம் பயப்பட வேண்டும். அது தான் பாவம். பாவம், அறியாமை, பலவீனம், பொருட்படுத்தாத்தனம் போன்றவற்றின் விளைவாகும். ஆகவே, பரிசுத்த ஆவி ஒளியின் பலத்தின் ஆவி, அன்பின் ஆவி, தமது வரங்களால் எம்மை ஆட்கொள்ள வேண்டும். அவர்தாமே எமது மனதை தெளிவாக்கவும், எமது ஆற்றலை திடப்படுத்தவும் எமது உள்ளங்களை இறை அன்பில் பற்றி எரியச் செய்யவும் வேண்டும். எமது மீட்பை உறுதிப்படுத்தும் வகையில் தேவ ஆவியானவரிடம் நாம் இரந்து கேட்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ என்றும் கன்னியாகிய தாய் மரியே. நாங்கள் ஒருபோதும் உமது அன்பு மகனை புண்படுத்தும் வகையில் நடவாது இருக்கும் படியாக பாதுகாத்தருளும். அவரை எப்போதும், எல்லா விடயங்களிலும் மகிமைப்படுத்தி, அன்பு செய்யும் வரத்தை எமக்கு பெற்றுத்தாரும் அம்மா".

**திரு இருதயத்தின் மாதாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**

**1ம் நாள்:-**

இந்த மாதத்தில் நாம் முக்கியமாக நினைவு கூற வேண்டியவர்கள் மரித்த எம் அன்பர்கள் தான். நாம் உங்களை நினைவு கூருவோம். உங்களோடு செபிப்போம். உங்களோடு உழைப்போம், ஏழைகளுக்கு கொடுப்போம். எல்லாம் உங்களது ஆத்தும இளைப்பாற்றிக்காகத்தான்.

**(பர. அருள். திரி)**

ஆண்டவரே என் மன்றாட்டுக்கு செவிசாய்த்தருளும். (திருப்பாடல் 130 கடைசிப்பக்கம்)

ஓ என் ஆண்டவரே, எல்லா விசுவாசிகளையும் படைத்து பாதுகாத்து மீட்டெடுத்தவரே, மரித்த சகல விசுவாசிகளின் ஆத்துமாக்களின் எல்லாப்பாவங்களுக்கும் மன்னிப்பை அளித்தருளும். எமது இந்த வேண்டுதல்களின் பொருட்டு அவர்களை மன்னியும். நீர் தாமே வாழ்ந்து ஆட்சி புரிகின்றவராயிருக்கின்றீர் ஆமென்.

**2ம் நாள்:-**

மரித்தவரை நினைக்கும் போதெல்லாம் எமக்குள்ளே ஒரு சந்தோச உணர்வு பிறக்கின்றது. இறப்பால் எம் குடும்பத்தை விட்டு பிரிந்தவரின் ஞாபகம் எமக்கு ஆறுதலைத் தருகின்றது.

**(பர. அருள். திரி)**

மிகவும் இரக்கமுள்ள இயேசுவே, உத்தரிப்பு நிலையிலுள்ள ஆன்மாக்கள் மீது கருணைக் கண் பாரும். நீர் இவர்களுக்காகவும் தான் மனிதனாய்ப் பிறந்து சொல்லிலடங்கா வேதனைப்பட்டு மரித்தீர். அவர்களது மன ஏக்கங்களுக்கு செவிசாயும். அவர்கள் சிந்தும் கண்ணீரின் பொருட்டும், அவர்களது பாவங்களின் நிமித்தம் அவர்கள் படும் வேதனைகளின் பொருட்டும் அவர்களை விடுவித்தருளும். மிகவும் கனிவான இயேசுவே உமது விலைமதிப்பில்லாத திரு இரத்தத்தை உத்தரிப்பு நிலையிலுள்ள ஆன்மாக்கள் மீது பொழிந்து அவர்களுக்கு புதுத்தென்பையும், புத்துணர்ச்சியையும் அளித்தருளும். உமது பலமிக்க வலது கரத்தால் அவர்களை வழிநடத்தி ஒளியும், சமாதானமும் நிறைந்த இடத்திற்கு கொண்டு சேரும். ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3ம் நாள்**

நீதிமானகளின் ஆன்மாக்கள் எம்மை விட்டுப்பிரிவதில்லை. நாங்கள் விரும்பினால் அவர்கள் எம்மோடு கூட நிலைத்திருப்பார்கள். அது மட்டுமல்லாது அவர்கள் எங்களுக்கு பாரிய உதவியாகவும், தேற்றரவாளர்களாகவும் அமைகின்றார்கள். நாங்கள் அவர்களைத் தொடர்ந்து எமது செபங்களில் நினைவு கூருவோம். எமது நற்செயல்களாலும், வேண்டுதல்களாலும் நாம் அவர்களுக்கு உதவும் போது அவர்களும் நாம் விண்ணகத்தை சென்றடைய பேருதவியாய் அமைவார்கள்.

(பர. அருள். திரி)

மிகவும் இரக்கமுள்ள இயேசுவே, நீரே எமது மீட்பு, எமது வாழ்வு, எமது உயிர்ப்பு, எனவே எமது துன்பவேளையில் உம்மிடம் ஓடி வந்துள்ளோம். எம்மைக் கைவிடாதேயும். உமது திருஇருதயத்தின் பேறுபலன்களாலும் மரியாயின் மாசற்ற இருதயத்தின் துன்பங்களின் நிமித்தமும் உமது திருஇரத்தத்தின் மூலமாக மீட்டுக்கொண்ட உமது அடியார்களாகிய எமக்கு உதவி புரிந்தருளும் ஆமென்.

**4 ம் நாள்**

மரணம் எம்மைப் பிரிக்கின்றது. அது எமது உலக பந்தத்தை முறிக்கின்றது. ஆனால் எமது ஆன்மீக பந்தத்தை அதாவது ஓர் ஆன்மா மற்றொரு ஆன்மாவோடு கொண்டுள்ள முடிவில்லா வாழ்வை, அதனால் ஒன்றும் செய்ய முடியாது.

(பர. அருள். திரி)

ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவே, உமது திரு இரத்தத்தின் பேறுபலன்களின் பொருட்டு உத்தரிப்பு நிலையிலுள்ள ஆன்மாக்களை கருணைகூர்ந்து விடுவித்தருளும். (விசேடமாக கைவிடப்பட்ட நிலையிலுள்ள ஆன்மாக்களின் மீது) அவ்வான்மாவை இன்றே பரலோகத்தில் சேர்த்தருளும். அது வானதூதர், புனிதர் மற்றும் பரிசுத்த அன்னையோடும் சேர்ந்து உம்மை சதாகாலமும் போற்றிப்புகழ்வதாக ஆமென்.

**5ம் நாள்**

இன்று நாம் ஒப்புக்கொடுக்கும் செபங்களின் மூலமாக கடவுள் மரணப்படுக்கையிலுள்ள ஒரு பாவிக்கு மனமாற்றத்தை ஏற்படுத்தி அவரது மீட்பை உறுதிப்படுத்துவாராக.

(பர. அருள். திரி)

அப்பா பிதாவே நான் உமது அன்பார்ந்த மகன், கல்வாரியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திய திரு இரத்தத்தையும் பரிசுத்த அன்னையின் துன்பதுயரங்களையும். உத்தரிப்பு நிலையிலுள்ள ஆன்மாக்களின் விடுதலைக்காகவும் அவர்களது பாவங்களுக்கு பரிகாரமாகவும், பரிசுத்த தாய்த்திருச்சபைக்காகவும் மற்றும் பாவிகள் அனைவரின் மீட்புக்காகவும், ஒப்புக்கொடுத்து செபிக்கின்றேன் ஆமென்.

**6ம் நாள்**

உத்தரிப்பு ஸ்தலத்திலுள்ள ஆன்மாக்கள் தமக்குத்தாமே உதவி செய்ய முடியாதவர்கள் அவர்களால் பரிகாரம் செய்யவோ, பலி ஒப்புக்கொடுக்கவோ, பூரண பலன்களை அடையவோ, திருவருட்சாதனங்களை பெறவோ முடியாது. அவர்களால் அவர்களுக்காக செபிக்கக்கூட முடியாது. ஆனால் உலகில் வாழும் எங்களால் கடவுள் பாராபட்சமின்றி மிகுதியாய்த் தரும் அருள்வரங்களை அவர்களோடு பகிர்ந்து கொள்ள முடிகின்றது.

(பர. அருள். திரி)

அன்பான இயேசுவே, உமது ஐந்து திருக்காயங்களின் பேறுபலன்களின் பொருட்டு எனது வேண்டுதலுக்கு செவிசாயும். இவ்வுலகில் பிரமாணிக்கமாயிருந்து உத்தரிப்பு ஸ்தலத்தில் வேதனைப்படும் ஆன்மாவை விடுவித்தருளும். அவ்வான்மாவை உமதண்டை அழைப்பதனால் அவ்வான்மா உம்மைப் புகழ்வதோடு மட்டுமன்றி என்னையும் உமது படிப்பினைகளின்படி வாழ உதவி புரிவதாக ஆமென்.

**7ம் நாள்**

இவ்வுலகில் வாழும் எம்மை விட உத்தரிப்பு நிலையிலுள்ள ஆன்மாக்கள் கடவுளுடைய நற்செயல்களை பெரிதும் மதிக்கின்றன. இறை அன்பால் தூண்டப்பட்ட அவ்வான்மாக்கள் கடவுளுக்கேயுரிய மதிப்பையும் பணிவையும் ஏற்றுக்கொள்வதோடு அவர்களது நன்றிகெட்ட தனத்தையும், பாவங்களையும் நினைவு கூர்கின்றன.

(பர. அருள். திரி)

ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவே, வணக்கத்துக்குரிய உமது இதயம் பாவிகளின் அடைக்கலமாகவும், ஆனந்தமாகவும் திகழ்கின்றது. இன்று நாம் நினைவுகூரும் உமது அடியார்களின் ஆன்மாக்களைக் கருணைக் கண் கொண்டுபாரும். அவர்களை உமது பரலோக மகிமைக்கும், முடிவில்லா மகிழ்ச்சிக்கும் இட்டுச்செல்லும் ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**8ம் நாள்**

துன்பகர பிரியாவிடை நிகழ்சிகளின் மத்தியிலும், நாங்கள் மறக்கவே மாட்டோம் என்ற பொருத்தனைகளின் மத்தியிலும் இறந்தவர்கள் மிக விரைவாகவே மறக்கப்படுகின்றார்கள்.

**'மறந்து விட்டார்கள் எனது வாழ்வை, ஒரு வார்த்தையாவது பேசுவதில்லை, மறந்து விட்டார்கள் எனது பெயரை, ஒருவரும் உச்சரிப்பது இல்லை, மறந்து விட்டார்கள் எனது கல்லறையை, ஒருவரும் வந்து பார்ப்பது இல்லை, மறந்து விட்டார்கள் எனது இறப்பை, ஒருவரும் அழுது புலம்புவதில்லை'.**

**(பர. அருள். திரி)**

நல்ல தெய்வமே, நீர் தாமே எமது தாய், தந்தையை மதித்து, அன்பு செய்ய கட்டளையிட்டீரே. உமது அன்பின் நிமித்தம் எமது பெற்றோரின் ஆன்மாக்கள் மீது இரக்கம் வையும். அவர்களது பாவங்களை மன்னியும். நானும் அவர்களை முடிவில்லாப் பரலோக ஆனந்தத்தில் முகமுகமாய் கண்டு மகிழ அனுக்கிரகம் செய்தருளும் ஆமென்.

**9ம் நாள்**

நீதிமான்கள் திருச்சபையின் அங்கத்தவர்களாக மரிப்பதுடன் தொடர்ந்தும் நீடிக்கின்றார்கள். அவர்கள் எங்களோடும், கடவுளோடும் நம்பிக்கை, எதிர்பார்ப்பு, அன்பு என்பவற்றினூடாக ஒன்றித்திருக்கின்றார்கள். ஆகவே ஒரு உறுப்பினர் மற்றவருக்கு உதவுவதுபோல நாங்களும் அவர்களுக்கு உதவுதல் வேண்டும்.

**(பர. அருள். திரி)**

ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவே, ஒலிவத் தோட்டத்தில் நீர் அனுபவித்த மிகுந்த வேதனைகளின் பொருட்டு உத்தரிப்பு நிலையிலுள்ள ஆன்மாக்கள் மீது இரக்கம் வையும். விசேடமாக எம்பொருட்டு அங்கு வேதனைப்படுபவர்களை நினைவுகூரும். அவர்களை விடுவித்து மகிமையடைந்த திருச்சபையில் சேர்த்து அவர்கள் உம்மை சதாகாலமும் போற்றிப் புகழச்செய்தருளும் ஆமென்.

**10ம் நாள்**

உத்தரிப்பு நிலையிலிருந்து விடுதலை பெறும்படியாக நாம் செபிக்கும் ஆன்மாக்கள் எங்களுக்கு விசேட விதமாக கடமைப்பட்டவர்கள். அவர்கள் எங்களுக்கு அருள்வரங்களையும், ஆசீரையும் பெற்றுத்தரும் பொறுப்புடையவர்கள். ஏனெனில் நாம் அவர்களது உதவியாளர்களாவோம். **(பர. அருள். திரி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவே. உமது பரிசுத்த மாதாவின் வியாகுலங்களைப் பார்த்து, உத்தரிப்பு நிலையிலுள்ள உமக்கு மிகவும் பிரியமான ஆன்மாவை விடுவித்து வானக வீட்டில் கொண்டு சேர்த்தருளும், அதுவும் வானதூதர், புனிதர் மற்றும் உமது பரிசுத்த மாதாவோடு சேர்ந்து உம்மைப் போற்றிப் புகழ்வதாக ஆமென்.

**11ம் நாள்**

புனித பிரான்சிஸ்டி சேல்ஸ் சொல்கின்றார், "உத்தரிப்பு நிலையிலுள்ள ஆன்மாக்களுக்கான பக்தி முயற்சியில், எல்லா இரக்கச் செயல்களுமே அடங்கியுள்ளது. அத்தோடே கூட அது இறை நம்பிக்கையால் தூண்டப்பட்டதன் பொருட்டு எமக்கும் பரலோக மகிமையைப் பெற்றுத்தர வல்லது"

(பர. அருள். திரி)

ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவே, விசுவாசிகளுடைய ஆன்மாக்களை நரக நெருப்பிலிருந்து விடுவித்தருளும். உமது தூதர்கள் அவர்களை பரிசுத்த ஒளியின் மகிமைக்கு இட்டுச்செல்வார்களாக. நாம் அவர்கள் பொருட்டு உமக்கு செய்யும் செபங்கள், நன்றியறிதல்களை தயவுடன் கண்ணோக்கி அவர்களை உமது பரலோக ஆனந்தத்தில் பங்காளிகளாக்கியருளும் ஆமென்.

**12ம் நாள்**

எம் உதவியை நாடி நிற்பவர்கள் பிறத்தியர் அல்ல. மாறாக அவர்கள் எமது பெற்றோர், சகோதர சகோதரிகள், உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்கள், அவர்கள் எமக்காக தம்மை அர்ப்பணித்து மிகுந்த சிரமங்களுக்குள்ளாகி எம்மைப் பாதுகாத்து பராமரித்தவர்கள். அவர்கள் இப்போது எம் மத்தியில் இல்லாவிட்டாலும், அவர்கள் எம்மோடு வாழும்போது அவர்களை சரிவர பாராததினால் இன்றும் நாம் கவலைப்படுவதுவுமுண்டு.

(பர. அருள். திரி)

ஓ என் இயேசுவே, உமது இரக்கக்கண்களை துன்புறும் திருச்சபை மீது திருப்பியருளும். உமது நீதியை ஆனந்தங்காண இரக்கத்தோடு சேர்த்து பரலோக வாயில்களை உத்தரிப்பு நிலையிலுள்ள ஆன்மாக்களுக்கு திறந்துவிடும், அவர்களும் என்றென்றும் உம்மை போற்றிப்புகழ்வார்களாக, ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13ம் நாள்

புனித அம்புறோசியார் "நாங்கள் உத்தரிப்பு நிலையிலுள்ள ஆன்மாக்களுக்கு செய்யும் ஒவ்வொரு இரக்கச்செயல்களும் எம் வாழ்நாளிலும், இறப்பின் பின்னரும் மிகுதியான அருள் வரங்களாக பொழியப்படும். அத்தோடு நூறு மடங்காக அவை தரப்படும்" என்று எமக்கு சொல்கின்றார்.

(பர. அருள். திரி)

இரக்கம் மிகுந்த இயேசுவே, உமது மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்களுக்கு பூரண பாவப்பொறுத்தலை அளித்தருளும். மேலும் இவ்வுலகில் உமது பரிசுத்த நற்கருணைக்கு மிகுந்த பக்தி வணக்கத்துடன் திகழ்ந்த ஆன்மாவுக்கு விசேட உதவி செய்தருளும். உத்தரிப்பு நிலையிலுள்ள காலத்தை குறைத்து அவ்வான்மாவுக்கு உம்மண்டை வந்து சேர்ந்து உம்மைப் புகழ்ந்தேற்றவும் எமது பரலோக பயணத்தில் உதவி புரியவும் அனுக்கிரகம் பண்ணியருளும் ஆமென்.

14ம் நாள்

மரித்த விசுவாசிகளுக்கான செபங்கள் உயிரோடு உள்ளவர்களுக்காக செய்வதை விட விரும்பத்தக்கது. ஏனெனில் வேதனையிலுள்ள அவ்வான்மாக்கள் எமது உதவி மிகுதியாய்த் தேவைப்படுபவர்கள், அதே வேளை தமக்குத்தாமே உதவி செய்ய முடியாத நிலையிலுள்ளவர்கள்.

(பர. அருள். திரி)

ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவே, உமது தெய்வீக வரப்பிரசாதங்களையும், ஆசீரையும் எங்கள் மீது பொழிந்தருளும். எமது சித்தத்தை உமது திருச்சித்தத்தோடு இணைத்து எமது மன்றாட்டுக்களை உமக்கேற்புடையதாக்கியருளும். உத்தரிப்பு நிலையில் கதறியழும் ஆன்மாக்கள் மீது மனமிரங்கி அவர்களுக்கு உதவிட விரைந்தருளும். ஆமென்.

15ம் நாள்

மரணத்தால் ஒருபோதும் நாம் எம்மவர் மீது கொண்ட அன்பையும் பாசத்தையும் எடுத்துவிட முடியாது. இப்போதுதான் அது மிக ஆழமாகின்றது. தூய்மையாகின்றது. அத்தோடு தொடர்ச்சியாகின்றது. பரலோகதத்தில் கடவுளோடு சேர்ந்தும், உத்தரிப்பு நிலையில் அவருக்கு பரிகாரம் செய்தும் அவர்கள் எம்மை மிகவும் ஆழமான விதமாக அன்பு செய்கின்றார்.

(பர. அருள். திரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ என் இயேசுவே. உத்தரிப்பு நிலையில் வேதனைப்படும் ஆன்மாக்களின் கூக்குரலுக்கு செவிசாய்த்தருளும். அவர்களுக்கு பாவப்பொறுத்தலை அளித்தருளும். அவர்கள் உம்மீது கொண்ட அன்பின் நிமித்தம் அவர்களை உமதண்டை அழைத்தருளும். அவர்கள் சதாகாலம் உம்மைப் போற்றிப்புகழ்வார்களாக ஆமென்.

**16ம் நாள்**

"ஆண்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் அருள் (வரப்பிரசாதம்) ஒன்றே இவ்வுலக செல்வங்கள் அனைத்தையும் விட மேலானது". (புனித அக்குவன்னஸ்)

(பர. அருள். திரி)

அன்பான ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவே, உத்தரிக்கும் ஆன்மாக்கள் மீது கருணை கூரும். மனித பலவீனத்திற்காக துக்கப்படுகின்ற அவர்களை அவர்களது வேதனையிலிருந்து விடுவித்தருளும். அதனால் என்றென்றும் அவர்கள் உம்மை வாழ்த்தி வணங்குவார்களாக ஆமென்.

**17ம் நாள்**

வாழ்நாளில் நாம் இந்த பரிசுத்த ஆன்மாக்களுக்கு அன்பையும், ஆதரவையும் காட்டினால், நாங்கள் ஆண்டவர் முன் நிற்கும் நேரத்தில் அவர்கள் ஆண்டவரின் நீதியிருக்கையைச் சூழ்ந்து கொண்டு எமக்காக மன்றாடுவார்கள் என்பது நிச்சயம்.

(பர. அருள். திரி)

ஓ இயேசுவே, உத்தரிக்கும் ஆன்மாக்களின் வேதனைகளை போக்கியருளும். எமது மறதியினாலும், அசதியினாலும் அவர்களை மென்மேலும் வேதனைப்பட விடாதேயும். அவர்களை அத்துன்பத்திலிருந்து விடுவித்தருளும். ஏனெனில் அவர்கள் உம்மைப் போற்றிப்புகழ்வதோடு எமக்காகவும் எமது மரண வேளையிலும் மன்றாடுவார்களாக ஆமென்.

**18ம் நாள்**

ஆண்டவர் எமது அன்புக்கு பாத்திரமானவரை தமதண்டை அழைத்துக்கொண்டாலும் அவர் எம்மை மறப்பதில்லை. உத்தரிப்பு நிலையில் தூய்மைப்படுத்தப்பட்டு ஆண்டவரோடு இணைந்தவராய் அவர் எம்மை மென்மேலும் அன்பு செய்கின்றார்.

(பர. அருள். திரி)

இரக்கத்தின் மாதாவே, வல்லமைமிக்கவரே, உமது மகன் உமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையும் மறுப்பதில்லை. என்று நாம் அறிவோம். எமது உற்றார். உறவினர், நலன்விரும்பிகளின் ஆன்மாக்களை உத்தரிப்பு வேதனையிலிருந்து விடுவிக்க இயேசுவை மன்றாடும். அவர்களும் வானக அணிகளோடு சேர்ந்து அவரைப் புகழ்வார்களாக ஆமென்.

**19ம் நாள்**

"வாழ்நாளில் அவரை நேசித்தோம். அவர் எமது செப, தப முயற்சிகளால் ஆண்டவரின் வீடு சேரும் வரை அவரை கைவிடாது அவருக்கு உதவி செய்வோம்". (புனித அம்புறோஸ்)

(பர. அருள். திரி)

ஓ என் ஆண்டவராகிய இயேசுவே, பரிசுத்த ஆன்மாக்களின் வேதனையை கருணைக்கண் கொண்டு பார்த்தருளும். உமது பாடுகள், மற்றும் மரணம் பேறுபலன்களின் பொருட்டு அவர்களை விடுவித்தளும். விசேடமாக இவ்வுலகில் உமது பரிசுத்த கன்னிமாதாவை மிகவும் அன்பு செய்த ஆன்மாவுக்கு உதவியருளும். அப்போது அவர் என்றென்றும் உம்மைப் புகழ்வதோடு எனக்காகவும் மன்றாடுவாராக ஆமென்.

**20ம் நாள்**

நாம் யாருக்காக புலம்பி அழுகின்றோமோ அவர் இப்போது வான்வீட்டில் இருந்துகொண்டு எமக்காக காத்து நிற்கின்றார்.

(பர. அருள். திரி)

மிகவும் இரக்கமுள்ள இயேசுவே, உமது ஐந்து திருக்காயங்களின் பொருட்டு நாம் எம்மவருக்காக செய்யும் வேண்டுதல்களுக்கு செவிசாயும். அவர் உமது வாயிலிருந்து வரும் ஒரு வர்ர்த்தைக்காக ஏங்கி நிற்கின்றார். ஓ இயேசுவே விசேடமாக இவ்வுலகில் உமது திருஇருதயத்திற்கு அன்பு செய்து வந்த அவ்வான்மாவுக்கு விரைந்து உதவியருளும். அப்போது அவரும் தூதர், அதிதூதர் மற்றும் புனிதர் அனைவருடனும் சேர்ந்து உம்மை சதாகாலமும் வாழ்த்திப்பாடுவாராக ஆமென்.

**21ம் நாள்**

இவ்வுலகில் நாம் இருக்கையில் நாம் அன்பு செய்வோர் எம்மை மறந்தால் நாம் துக்கப்படுகின்றோம். ஆனால் நாம் உத்தரிப்பு நிலையில் எமக்கு நாமே உதவிட முடியாது. துன்புறும் போது எங்களை அவர்கள் மறப்பின் அது கொடிய வேதனைதான்.

(பர. அருள். திரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ என் ஆண்டவரே. சதா காலமும் நீதியுள்ளவரே. உமது அன்பிரக்கத்தை நாடி உத்தரிப்பு நிலையில் துன்புறும் அடியார்களுக்காக நாம் செய்யும் செபங்களை ஏற்றருளும். அவர்களை விடுவித்தருளும். ஏனெனில் அவர்கள் உம்மைப் புகழ்வார்களாக எமக்காக உமது நீதியிருக்கையின் முன் எமது மரணவேளையில் மன்றாடுவார்களாக ஆமென்.

**22ம் நாள்**

தொடர்ச்சியாக மரித்த விசுவாசிகளுடைய ஆன்மாக்களுக்காக செபிப்போம். புனித. பிரான்சிஸ்டி சேல்ஸ் அடிக்கடி சொல்லுவார். "எனது நண்பர்கள் என்மீது வைத்திருக்கும் நல்லெண்ணத்தை முன்னிட்டு நான் பயப்படுகின்றேன். அவர்கள் நான் பரலோகத்தில் இருப்பதாக எண்ணி என்னை துன்புற விட்டுவிடுவார்கள்"

(பர. அருள். திரி)

மிகவும் இரக்கமுள்ள இயேசுவே உத்தரிக்கும் ஆன்மாக்கள் மீது கருணை காட்டும். நீர் தாமே அவர்களுக்காக மனுவுருவெடுத்து மரணத்தைக் தழுவிக்கொண்டீரே, உமது வேதனை நிறைந்த மரணத்தின் பலன்களை முன்னிட்டு மரித்த விசுவாசிகளை விடுவித்தருளும். அவர்களும் உம்மோடு கூட பேரின்பத்தை துய்த்துணர்வார்களாக ஆமென்.

**23ம் நாள்**

எமது மன்றாட்டுக்களால் நாம் ஒருவரை உத்தரிப்பு நிலையிலிருந்து விடுவிக்கும் போது அது அவரது நன்றிக்கடனை மட்டுமல்ல அவரது காவல்தூதர், அவர் தன்னை அர்ப்பணித்திருந்த பரிசுத்த கன்னிமரியாள், ஏன் ஆண்டவராகிய கடவுள் கூட மிகுந்த மகிழ்ச்சியுறுவார்கள். நாம் அவ்வான்மாவுக்காக செய்யும் செபங்களையும் கடவுளும் கேட்கின்றார். அவரும் அவரது இரக்கத்தை அவ்வான்மா மீது நிரம்பவே பொழிகின்றார்.

(பர. அருள். திரி)

மிகவும் அன்புள்ள இயேசுவே, என்னால் இவ்வாறு சொல்ல முடியுமானால் எனது செபங்களால் பரலோகத்திற்கு ஒரு ஆன்மா எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது, அவ்வான்மா எனக்காக கடவுளிடம் பரிந்து பேசுகின்றது. எனக்காக கடவுளைப் போற்றுகின்றது. என் பொருட்டு தேவ அன்னையை அன்பு செய்கின்றது, அப்படியாயின் என்னே ஆனந்தம் எனக்கு? விசேடமாக செபத்தில் அவசர அவசரமாக, பாராமுகமாய் இருந்ததும் உத்தரிப்பு நிலையிலுள்ள ஆன்மாவை விடுவித்தருளும். பரலோக ஆனந்தத்திற்கு கூட்டிச்சேர்த்தருளும். உம்மை என்றென்றும் புகழ்வதோடு எனக்காகவும் என் மரண வேளையில் மன்றாடுவதாக ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**24ம் நாள்**

என் பொருட்டு ஒரு ஆன்மா உத்தரிப்பு நிலையிலிருந்து விடுவிக்கப்படின் அந்த மகிழ்ச்சியே தனி ஒரு பரிசுத்த ஆன்மா எனக்காக, என் பெயரால் கடவுளை மெய்யாகவே அன்பு செய்கிறது. நாம் யாருக்காக செபிக்கின்றோமோ அவ்வான்மாக்கள் எல்லாவற்றிலுமே எமக்கு பாதுகாப்பாளர்களையும் இருக்க உருவாக்குகின்றோம்.

(பர. அருள். திரி)

மிகவும் அன்பான இயேசுவே உமது அன்பான இருதயம் ஏனை-யோர் பொருட்டு வேதனைப்பட்டதே. உத்தரிப்பு நிலையிலுள்ள எமது உற்றார், உறவினர்களின் ஆன்மாக்கள் மீது இரக்கம் வையும். அவர்களது அவலக்குரலை கேட்டு அவர்களுக்கு உம்மோடு கூட பேரின்பத்தில் பங்கு கொடுத்தருள வேண்டுகின்றோம் ஆமென்.

**25ம் நாள்**

மிகவும் வேதனைக்குரிய விடயம் தான் இங்கு உயிரோடு வாழ்பவர்கள் வெகு சீக்கிரமாகவே இறந்தவர்களை மறந்து விடுகின்றார்கள். நாங்கள் இருக்கும் போது இறந்தவரை மறந்து விடுகின்றோம். நாங்கள் மரணித்த பின் ஏனையோர் எம்மை மறந்துவிடுகின்றார்கள். புனித மொனிக்கா தனது மரணப்படுக்கையில் இருந்த வண்ணம் தனது மகன் புனித அகுஸ்தீனை வேண்டிக்கொண்டதாவது, எனது பூதவுடலை எங்காவது புதைத்துவிடும். மாறாக இறைவனின் திருப்பீடத்தண்டையில் இருக்கும் போது என்னை மறந்து விடாதேயும்.

(பர. அருள். திரி)

இரக்கம் நிறைந்த இயேசுவே, ஆன்மாக்களின் அன்பாளரே, உமது திருஇருதயத்தின் வேதனைகளின் பொருட்டும், மரியாளின் மாசற்ற இருதயத்தின் வியாகுலங்களின் பொருட்டும் உத்தரிக்கும் ஆன்மாக்களை உமது திருஇரத்தத்தால் கழுவித்துடைத்தருள வேண்டுமென்று இரந்து மன்றாடுகினறோம். அவர்களது வேதனையிலிருந்து அவர்களை விடுவித்தருளும். அப்போது அவர்களும் வானக சேனைகளுடன் சேர்ந்து உமது புகழைப் பாடிப்போற்றி எமக்காகவும் எமது மரண வேளையிலும் மன்றாடுவார்களாக ஆமென்.

**26ம் நாள்**

மரித்த விசுவாசிகளுக்கு உதவி புரிவதில் நாம் எதையும் இழக்கப்போவதில்லை. நாங்கள் செபிக்கக் கடமைப்பட்டுள்ளோம், திருப்பலியில் இணைந்து கொள்வதும், திருவருட்சாதனங்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொள்வதும். தான. தருமம் செய்வதும். குறித்த தினங்களில் உபவாசம் இருப்பதும் ஆகும். நாங்கள் அருள்நிலையில் இருந்து கொண்டு இப்புண்ணிய காரியங்களை இவ்வான்மாக்கள் பேரில் செய்யும்போது அவை ஆண்டவருக்கு ஏற்புடையனவாகவும் அவர்களது விடுதலையை துரிதப்படுத்துவதுமாகவும் அமையும்.

(பர. அருள். திரி)

இரக்கம் நிறைந்த இயேசுவே உத்தரிக்கும் ஆன்மாக்களை விடுவித்தருளும். தமது தவறுகளால் விசேடமாக எனது தவறான முன்மாதிரிகையின் நிமித்தம் தவறிய ஆன்மாக்கள் மீது இரக்கம் வையும். அவ்வான்மாவை விடுவித்து உமதண்டை சேர்த்தருளும், சதாகா-லமும் உம்மைப்போற்றி எனக்காகவும் எனது தேவையான வேளையில் மன்றாடுவாராக ஆமென்.

**27ம் நாள்**

ஆண்டவர் நமக்குத்தரும் அனைத்தையும் எவ்வித முணுமுணுப்புமின்றி ஏற்றுக்கொள்ளுவோம். ஒவ்வொரு காலையிலும் உத்தரிக்கும் ஆன்மாக்களுக்காக எமது செப்பங்கள், நற்காரியங்கள் அனைத்தையும் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுப்போம். இப்படிச்செய்வதனால் நாம் அவர்களுக்கு அளவிடமுடியாத விதத்தில் உதவிசெய்வோம்.

(பர. அருள். திரி)

மிகவும் இரக்கமுள்ள இயேசுவே, உமது திருக்குழந்தைப் பருவத்தின் பேறுபலன்களின் பொருட்டு உத்தரிக்கும் ஆன்மாக்களை அவர்களது வேதனைகளிலிருந்து விடுவித்தருளும். குறிப்பாக, நீண்டகாலமாய் உமது நீதிக்குப்பரிகாரம் புரியும் ஆன்மாவின் மீது கண்நோக்கியருளும். அவரும் உமதண்டை சேர்ந்து வானக சேனைகளுடன் கூட உம்மைப் புகழவும் எமக்காக எமது தேவையான வேளையில் மன்றாடவும் பணித்தருளும் ஆமென்.

**28ம் நாள்**

உத்தரிப்பு நிலையில், நீதியும் அன்பும் நிறைந்த ஆன்மாவானது எவ்வித பராக்குகளிலிருந்து விடுபட்டு ஆண்டவரது பரிசுத்தத்தை மட்டுமே நினைத்து தன்னைத் தூய்மைப்படுத்த வேண்டிய அவசியத்தை உணருகின்றது. அவரது வேதனை மிகவும் கொடியது, ஏனெனில் அவர் இறைபிரசன்னத்திலிருந்து விலகியிருக்கின்றார். அது முடிவுறும் காலநேரத்தையும் அவர் அறியமாட்டார்.

(பர. அருள். திரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயத்தில் சாந்தமும், தாழ்ச்சியும் நிறைந்த இயேசுவே. நாம் உத்தரிக்கும் ஆன்மாக்காகச் செய்யும் செபங்களை கண்ணோக்கியருளும். விசேடமாக தலைக்கனம் அல்லது கர்வம் எனும் பெரும் பாவத்திற்காக வேதனைப்படும் ஆன்மாவின் மீது கருணை கூரும். அவரை விடுவிப்பதனால் அவரும் உம்மைப் புகழ்வதோடு எனக்காகவும் எனது மரண வேளையில் வேண்டிக்கொள்வாராக ஆமென்.

**29ம் நாள்**

நாங்கள் உத்தரிப்பு நிலையிலுள்ள ஆன்மாக்களுக்காக செபிப்பதில் ஓய்ந்துவிடக்கூடாது. கடவுளின் மகிமையையும், மாட்சிமையையும், எமது மீட்பும் அவர்களது விடுதலையைச் சார்ந்தது.

**(பர. அருள். திரி)**

இரக்கமே உருவான இயேசுவே, உமது மனுவுருவெடுப்பு மற்றும் சிறுபராயம் போன்றவற்றின் பொருட்டு உத்தரிக்கும் பரிசுத்த ஆன்மாக்களை விடுவித்தருளும். குறிப்பாக இளமைப்பருவத்தின் நிமித்தம் உதாசீனமாகவிருந்து உமது வெறுப்பை சம்பாதித்துக் கொண்ட ஒருவரின் ஆன்மாவை கருணைக்கண் கொண்டுபாரும். அவரை விடுவித்து பேரின்ப மகிழ்ச்சியைக் கொடுத்தருளும். அவரும் உம்மைப் புகழ்ந்தேற்றி எனக்காகவும் வேண்டுவாராக ஆமென்.

**30ம் நாள்**

உத்தரிக்கும் ஆன்மாக்களுக்காக நேரடியாக ஒப்புக்கொடுக்கப்படும் செபங்கள் ஒரு சிறுபிள்ளை கடவுளின் அன்பையும், இரக்கத்தையும் வேண்டிச் செபிப்பது போன்றதாகும். இதயத்தின் ஆழத்திலிருந்து ஒப்புக்கொடுக்கப்பட்ட அப்படிப்பட்ட செபம் எவ்வாறு பலனற்றுப்போகும்.

**(பர. அருள். திரி)**

சாந்தமுள்ள இயேசுவே, பரிசுத்த நற்கருணையில் என்றென்றும் பிரசன்னமாய் இருப்பவரே உத்தரிப்பு நிலையிலுள்ள ஆன்மாக்கள் மீது மிகுந்த அன்பு கொண்டவரே, மரித்த உமது விசுவாசிகளுடைய ஆன்மாக்கள் மீது இரக்கம் வையும். அவர்களைத் தீர்ப்பிடுவதில் கடினமாய் இராதேயும். உமது பரிசுத்த இரத்தத்துளிகள் அவர்களை சுட்டெரிக்கும் அக்கினியின் மீது விழுவதாக. ஓ இரக்கமுள்ள மீட்பரே, உமது தூதர்களை அனுப்பி அவர்களை மகிழ்ச்சியும் ஒளியும், சமாதானமும் நிறைந்த இடத்திற்கு அழைத்துச் செல்ல கட்டளை இட்டருளும் ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரக்கமுள்ள ஆண்டவராகிய இயேசுவே, நித்திய இளைப்பாற்றியை அவர்களுக்கு அளித்தருளும். நித்திய இளைப்பாற்றியை அவர்களுக்கு அளித்தருளும் ஆண்டவரே. முடிவில்லாத ஒளி அவர்கள் மேல் ஒளிர்வதாக. சமாதானத்தில் இளைப்பாறுவார்களாக ஆமென்.

## நம்மைப் பாதுகாக்கும் இறைவன்

உன்னதரின் பாதுகாப்பில் வாழ்பவர், எல்லாம் வல்லவரின் நிழலில் தங்கியிருப்பவர். ஆண்டவரை நோக்கி, நீரே என் புகலிடம், என் அரண், நான் நம்பியிருக்கும் இறைவன் என்று உரைப்பார். ஏனெனில் ஆண்டவர் உம்மை வேடரின் கண்ணியினின்றும் கொன்றழிக்கும் கொள்ளை நோயினின்றும் தப்புவிப்பார். அவர் தம் சிறகுகளால் உம்மை அரவணைப்பார். அவர் தம் இறக்கைகளின் கீழ் நீர் புகலிடம் காண்பீர். அவரது உண்மையே கேடயமும் கவசமும் ஆகும். இரவின் திகிலுக்கும் பகலில் பாய்ந்துவரும் அம்புக்கும் நீர் அஞ்சமாட்டீர். இருளில் உலவும் கொள்ளை நோய்க்கும் நண்பகலில் தாக்கும் கொடிய வாதைக்கும் நீர் அஞ்சமாட்டீர். உம்பக்கம் ஆயிரம் பேர் வீழ்ந்தாலும், உம் வலப்புறம் பதினாயிரம் பேர் தாக்கினாலும், எதுவும் உம்மை அணுகாது. பொல்லார்க்குக் கிடைக்கும் தண்டனையை நீரே பார்ப்பீர். உம் கண்ணாலேயே நீர் காண்பீர். ஆண்டவரை உம் புகலிடமாய்க் கொண்டீர். உன்னதரை உம் உறைவிடமாக்கிக்கொண்டீர். ஆகவே தீங்கு உமக்கு நேரிடாது. வாதை உன் கூடாரத்தை நெருங்காது. நீர் செல்லும் இடமெல்லாம் உம்மைக் காக்கும்படி தம் தூதர்க்கு அவர் கட்டளையிடுவார். உம் கால் கல்லின் மேல் மோதாதபடி அவர்கள் தங்கள் கைகளில் உம்மைத் தாங்கிக்கொள்வர். சிங்கத்தின் மீதும் பாம்பின் மீதும் நீர் நடந்து செல்வீர். இளஞ்சிங்கத்தின்மீதும் விரியன் பாம்பின்மீதும் நீர் மிதித்துச்செல்வீர். அவர்கள் என்மீது அன்புகூர்ந்தால், அவர்களை விடுவிப்பேன். அவர்கள் என் பெயரை அறிந்துள்ளதால், அவர்களைப் பாதுகாப்பேன். அவர்கள் என்னை நோக்கி மன்றாடும் போது அவர்களுக்குப் பதிலளிப்பேன். அவர்களது துன்பத்தில் அவர்களோடு இருப்பேன். அவர்களைத் தப்புவித்து அவர்களைப் பெருமைப்படுத்துவேன். நீடிய ஆயுளால் அவர்களுக்கு நிறைவளிப்பேன். என் மீட்பை அவர்களுக்கு வெளிப்படுத்துவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உத்தரிப்பு ஸ்தல ஆன்மாக்களுக்காக செபிக்கும் இயக்கத்தின் உறுப்பினர்கள் அடையும் நன்மைகள்

1. அவர்களுடைய கருத்துக்களுக்காக தினமும் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.
2. அவர்களுடைய பிறந்தநாள் அன்று விசேட விதமாக நினைவு கூறப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.
3. உறுப்பினர்கள் அனைவரோடும் சேர்ந்து கிடைக்கப் பெறும் எண்ணிலடங்கா அருளில் பங்கெடுத்தல்.
4. விடுதலை அடைந்த ஆன்மாக்களின் உதவியைப் பெறுதல்
5. செய்கின்ற இந்த நற்காரியத்தை முன்னிட்டு உத்தரிப்பு ஸ்தலத்தில் குறுகிய காலத்தை செலவிடுதல்

## உத்தரிப்பு ஸ்தல ஆன்மாக்களுக்காக செபிக்கும் இயக்கத்தின் உறுப்பினர்களின் கடமைகள்

1. திருப்பலிகளை உத்தரிப்பு ஸ்தல ஆன்மாக்களுக்காக ஒப்புக் கொடுத்தல்
2. யாரும் நினையாத ஆன்மாக்களை நினைவு கூர்ந்து செபித்தல்
3. தூய நற்கருணைக்கு முன்பாக திருமணித்தியாலம் மற்றும் செபங்களை ஆன்மாக்களுக்காக ஒப்புக் கொடுத்தல்
4. இக்கருத்துக்காக தாங்கள் செய்யும் நற்செயல்களை மற்றும் சுய ஒறுத்தல்களை ஒப்புக் கொடுத்தல்
5. இன்னும் பலரை இந்நற்காரியத்தில் பங்கெடுக்கச் செய்தல்
6. என்னைப் படி அல்லது வருத்தப்படு எனும் புத்தகத்தை நண்பர்கள் மற்றும் ஏனையோருக்கும் பகிர்ந்து கொடுத்தல்
7. திருப்பலி ஒப்புக் கொடுக்க மற்றும் இப்புத்தகத்தை அச்சிட பண உதவி செய்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தரிப்பு ஸ்தல ஆன்மாக்களுக்காக செபிக்கும் இயக்கத்தில் சேர விரும்புபவர்கள் பின்வரும் விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து அனுப்பவும்.

## APPLICATION FOR MEMBERSHIP

Mr./ Mrs./ Ms./ Bro./ Sis./ Fr./ Sr./ ................ [ Male ] [ Fem ] Civil Status: S/M/ ..............

Starter Kit [ ] English [ ] Tamil

Birthdate: [ ] [ ] [ ]
MM / DD/ YY

First Name | Middle Name | Last Name

Address:

Phone / Fax / E-mail / Mobile

Educational attalinment

Profession

I leamed about the "Prayer Warriors of the Holy Souls" from :

Signature | Date

**"PRAYER WARRIORS OF THE HOLY SOULS"**
**An Apostolate of the**
**Monfort "Shared Blessings" Foundation, Inc.**

Unit E2 Gueventville I, Calbayog St.,
Brgy. Highway Hills, Mandaluyong City
Tel. Nos. 531-0391-532-2831
locals 100 and 101
www.pwhs-mfi.org
e-mail: info@pwhs-mfi.org
Hotline Text No.: +63-918-9290603



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலும் முடிவுமற்ற இறைவா,
நான் உமது திருமைந்தனின்
விலைமதிக்கப்படாத திரு
இரத்தத்தை இன்று உலகம் பூராவும்
நடைபெற்ற திருப்பலிகளோடு
சேர்த்து உத்தரிப்பு ஸ்தல தூய
ஆன்மாக்களுக்காகவும், பாவிகள்
அனைவருக்காகவும்,
திருச்சபையில் உள்ளவர்களுக்காகவும்,
எனது வீட்டிலும், குடும்பத்திலும்
உள்ளவர்களுக்காகவும்
ஒப்புக்கொடுக்கின்றேன் ஆமென்.

- புனித கேட்ரூட்
அம்மையாரின் செபம்



இந்த செபத்தை ஒருமுறை
உச்சரிக்கும்போது
உத்தரிப்பு ஸ்தலத்தில்
உள்ள ஆயிரம் (1000)
ஆன்மாக்கள் மீட்கப்படும்

CCP
COLOMBO CATHOLIC PRESS

அச்சுப் பதிப்பு
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

Cover Design By : Thilina Alahakoon - CCP

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org